Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 36 இதழ் - 8 ஆகஸ்ட் - 2023

தனிப்பிரதி
ரூ.10/-



ஜெபியுங்கள் !! திட்டமிடுங்கள் !! பங்கு பெறுங்கள் !!

**காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்,**
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும்**
**இணைந்து நடத்தும்**

# இருபத்தாறாம் வேதாகம கருத்தரங்கம்

# 26th Annual Bible Lectureship

**கருப்பொருள்** : சவாலான காலகட்டத்தில் தைரியமாயிருத்தல்

**THEME** : Being Courageous in Challenging Times

**நாள் : அக்டோபர் 23,24 - 2023 ( திங்கள், செவ்வாய்)**
(அரசு விடுமுறை நாட்கள்)

**நேரம்**
திங்கள் : காலை 8:45 - மாலை 4:45 மணி
செவ்வாய் : காலை 8:45 - மதியம் 1:00 மணி

**இடம்**
**கிறிஸ்துவின் சபை வளாகம்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701 . தமிழ்நாடு.

- வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடம் உண்டு.

தொடர்புக்கு : 04257 - 230030 செல் : 98427 - 30382, 99655 - 30385, 98652 - 90572.

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. ஆராதனை வகைகள் | 11 |
| 3. பெண்கள் பகுதி | 14 |
| 4. வாலிபர் பகுதி | 17 |
| 5. சிறுவர் பகுதி | 23 |
| 6. நீதிமானாகிய நோவா... | 24 |
| 7. எப்படி எல்லா புத்திக்கும்... | 29 |
| 8. சகல பிரயாசத்தினாலும்... | 32 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 36 Sep - 2023 Issue - 9


ஆசிரியர் உரை

## இழந்து மீண்ட இளையவன் உவமையிலிருந்து....

**சொ**ல் வளத்துக்குக் கொஞ்சமும் பஞ்சமில்லாத நம் தாய்த் தமிழ் மொழியில் முது மொழிகளுக்கும், பழமொழிகளுக்கும் குறைவேதும் இருப்பதில்லை. **கருவாடு விற்ற காசு நாறாது, நாய் விற்ற காசு குரைக்காது** போன்றவைகள் அப்பெரும் சமுத்திரத்தின் சில துளிகள். எல்லாப் பழமொழிகளுக்கும் உள்ளான பொருள் இருப்பது போல இவைகளுக்கும் உண்டு. அதாவது, ஒரு காரியத்தில் பார்க்கப்பட வேண்டியது, அதன் மூலமான அனுகூலமும், நன்மைகளும் தானேயொழிய மற்றபடி ஆகாதவைகள் பற்றியதல்ல. இக்கருத்தை அப்படியே மனதில் ஏந்தினவர்களாக, பல பட்டங்களால் அலங்கரிக்கப் பட்டுள்ள இளைய குமாரனிடம் வருவோம். லூக்கா 15–ம் அதிகாரத்தில் இயேசுவால் மொழியப்பட்ட மூன்றாவது உவமையில் உள்ள மூன்று முக்கியப் பாத்திரங்களில் இந்த இளைய குமாரனும் ஒருவன். இந்த இளைய குமாரன் இழி பிறவியாகப் பார்க்கப்பட்டு, பட்டங்கள் பல இவன் கேட்காமலேயே இவனுக்கு சூட்டப்பட்டுள்ளது. ஆம், **கெட்ட குமாரன், ஊதாரி மைந்தன், ஆஸ்திகளை வீணடித்தவன்** என்று. இப்பட்டங்களுக்கு இவன் சற்றும் சம்பந்தமில்லாதவன் என்று சொல்ல முடியாவிட்டாலும், முற்றும் சம்பந்தமுடையவன் என்றும் சொல்லிவிட முடியாது.

ஓர் உண்மையை உரக்கச் சொல்லும்படியாக இயேசுவாலே லூக்கா 15 – ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட மூன்று உவமைகளில், முதல் இரண்டு உவமைகள் **காணாமல் போன ஆடு, காணாமல் போன காசு என்று சொல்லப்படுவது போல, காணாமல் போன மகன்** என்று சொன்னால் கூட இவனுக்கு கொஞ்சமாகிலும் நியாயம் கிடைத்திருக்கும். அது இல்லாமல், இவன் கடந்த 2000 ஆண்டுகளாக ஏச்சுப்பேச்சுக்கு ஆளாகி வருகிறான். ஒரு வகையில் இவன் பாவமே! விதைத்ததை அறுத்துதானே ஆக வேண்டும்.

சரி, நாமாகிலும் இவனை மேலும் சங்கடப்படுத்தாமல் இருக்கும் படியாக, **இழந்து மீண்ட இளையவன்** என்று அழைக்கலாம். இழந்து மீண்ட இளையவன் பற்றிய உவமையில் உள்ள மூவரில் இந்த இளையவன் பற்றி நாம் எல்லோரும் **டன் கணக்கில்** அறிந்து வைத்துள்ளோம். இவனை ஏற்றுக்கொள்ள அறவே மறுத்த மூத்த குமாரன் பற்றியும் நாம் **மூட்டை மூட்டையாகக்** கேட்டிருக்கிறோம். ஆனால், இன்னொரு முக்கியப் பாத்திரமான தகப்பன் பற்றி நாம் **கிலோ கணக்கில்** கூட அறியாதவர்களாக உள்ளோம். அக்குறையைத் தான் இம்மாதம் நாம் நீக்கிப்போட முயற்சிக்க உள்ளோம்.

அதற்கு முன்பாக, நமது மாறாத வழக்கத்தின்படி இதன் பின்னணிக்குள்ளாகக் கடந்து வந்து விடுவோம். சரியா?

இயேசு ஆண்டவரால் மொழியப்பட்டு, புதிய ஏற்பாட்டில் நமக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ள சுமார் 39 உவமைகளுள் மிகவும் அழகானது என்று வர்ணிக்கப்படுவது இந்த உவமைதான். உவமைகளில் இது **முத்து** என்றும், **கிரீடம்** என்றும் அழைக்கப்படும் தகுதி வாய்ந்தது. இந்த உவமை தகப்பனுடைய எல்லையற்ற அன்பைத் தாண்டி ஒரு மூன்று முக்கியச் செய்திகளை உள்ளடக்கியுள்ளது. அவை, 1. மனந்திரும்புதல் 2. மன்னிப்பு 3 மீட்பு. இப்படிப் பெரும் சிறப்புக்குரிய இந்த உவமையை இயேசு சொன்னபோது, அவருக்கு முன்பாக யூத சமயத்தின் சில பிரிவினர் இருந்தனர். அவர்களில் முதல் இரண்டு வகை ஆயக்காரரும், பாவிகளும். பிற பிரிவினரால் மட்டமாகவும், அற்பமாகவும் எண்ணப்படும் இவர்கள் **வசனங்களைக் கேட்கும்படி** அவரிடத்தில் வந்திருந்தார்கள். அடுத்த இரண்டு பிரிவாராகிய பரிசேயரும், வேதபாரகரும் அவரிடத்தில் **குறை காணவும், குற்றப்படுத்தவும்** வந்திருந்தார்கள். வந்த வேலையை உடனடியாக ஆரம்பித்தும் விட்டார்கள். ஆம், முறுமுறுத்து, இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார் என்றார்கள் [15:2]

நாங்கள் வேதம் அறிந்தவர்கள் என்று மார்தட்டும் இவர்கள், அவர்கள் நம்புகிற பழைய ஏற்பாட்டில் 300க்கும் அதிகமான தீர்க்கதரிசனங்களில் முன்னுரைக்கப்பட்டு, காலங்கள் நிறைவேறின போது [கலா. 4:5] கன்னியின் வயிற்றில் பிறந்து, இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் மேசியாவாகிய இயேசு வந்தார் [லூக். 19:10] என்பதை அறியாமல் போனபடியால், அவர்களுடைய மக்கு மண்டையில் இப்பேருண்மையைப் புரியவைக்கும்படியாகவும், பரலோக தேவனுடைய அன்பை மானிடம் புரிந்து கொள்ளும்படியாகவும் இந்த உவமையை விளம்பினார். 32 வசனங்கள் கொண்ட இந்த அதிகாரத்தில் முதல் இரண்டு உவமைகளுக்கு ஏழு வசனங்களும், இந்த உவமைக்கு 22 வசனங்களும் பகிரப்பட்டுள்ளது. இதன் சிறப்புக்கு இதுவும் கூட ஒரு காரணமாக உள்ளது.

இந்த உவமையில் நாம் பிரதானமாகக் கவனிக்க வேண்டியது **தகப்பனுடைய** செயல்பாட்டைத் தான். பரலோக தேவனுடைய

சாயலையும், தன்மையையும் இந்தத் தகப்பனிடத்தில் மனம் குளிர நாம் காண முடியும். ஆம், ஆஸ்தியில் தனக்கு வரும் பங்கைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று இளைய மகன் கேட்டபோது, **மாறுத்தரம்** ஒன்றும் சொல்லாமல் பங்கிட்டுக் கொடுத்தான். தான் தகப்பனுடைய கட்டுப்பாட்டில் இருக்கக் கூடாது என்பதைத் தாண்டி தகப்பனுடைய கண்ணிலேயே படக்கூடாது என்று முடிவெடுத்து ஊரை விட்டு அல்ல, நாட்டை விட்டே தூரமாகப் போய், துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி, தன் ஆஸ்தியை அநியாயமாய் அழித்து, மொத்தத்தையும், தொலைத்து விட்டான். **பாவி போன பக்கம் ஏரியும் பாழாகும்** என்ற முதுமொழிப்படி **தேசத்தில் கொடிய பஞ்சமுண்டாகி,** குறைவு படத் தொடங்கி, வயிற்றுச் சோத்துக்கே வழியில்லாமல், தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக் கொண்டான். ஆம், அவன் இவனைச் சேர்த்துக் கொள்ளவில்லை. மாறாக, இவன் போய் ஒட்டிக்கொண்டான். அவனுக்குக் கொடுக்கப்பட்ட பணி, யூதர்களால் அருவருப்பாகக் கருதப்பட்ட பன்றி மேய்க்கும் வேலை. டேய் தம்பி, உனக்கு இது தேவையா? பன்றிகளுக்குப் போடப்படும் தவிட்டைக் கூட யாரும் இவனுக்குக் கொடுக்கவில்லை. அதைத் தின்னும் உரிமை கூட இவனுக்கு மறுக்கப்பட்டிருந்தது!

அப்பாடா, இந்த இடத்தில் அவனுக்கு புத்தி தெளிந்தது. தன்னை எல்லா நிலைகளிலும் சுத்தமாக இழந்திருந்த இவன், ஒருவகையாக தனக்குள்ளாக வந்து சேருகிறான். அப்பொழுது தன் தகப்பனையும், தகப்பன் வீட்டுச் சூழலையும், தகப்பன் வேலைக்காரர்களையும் நினைக்கிறான். தகப்பனுடைய கூலிக்காரர்கள் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, **நானோ பசியினால் சாகிறேன்** என்றான். தன் வாழ்வில் முதல் முறையாக தான் செய்த முட்டாள்தனத்தைப் முற்றாகப் பார்த்தான். அங்கே அவன், எவ்விதத் தாமதமின்றி **எழுந்து போவேன்** என்று சொன்னதோடு, ஒரு முழுமையான மனமாற்றத்தோடு எழுந்து புறப்பட்டு வந்தான். அப்படி வருவதற்கு முன்பாகவே, தகப்பனிடத்தில் போகும் போது. **என்ன சொல்ல வேண்டும்** என்று தனக்குள்ளாக **ஒரு முறை சொல்லிப் பார்த்துக் கொண்டான்** (வசனம் 19). ‘‘உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல’’ என்று. இவன் இப்படி சொன்னது இவனுடைய உண்மையான மனமாற்றத்திற்கான பெரும் சாட்சியாய் உள்ளது.

மனம் திருந்திய இந்த இளையவன் தகப்பனிடத்திலே வந்த போது, தகப்பன் பற்றியும், தகப்பனுடைய அன்பு பற்றியும், தகப்பன் செயல்பாடு பற்றியும் உவமையில் சொல்லப்பட்டிருப்பவை, மானிடர் மீதான பரலோக தேவனுடைய அன்பை நமக்குப் படம் போட்டுக் காட்டுகிறது. ஆம், உவமையில் உள்ள தகப்பன், இளையவன் தன் ஆஸ்தியைப் பிரித்துச் சென்ற நாள் தொடங்கி, அவன் மனமாற்றத்திற்காக ஆவலோடு நாள்தோறும் காத்திருந்துள்ளார் என்றே தெரிகிறது. எப்படியெனில், அவன் தூரத்திலே வரும்போதே அவனைக் கண்டு,

மனதுருகி, **ஓடி** அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு முத்தம் செய்துள்ளான். அத்தோடு உயர்ந்த வஸ்திரம், கைக்கு மோதிரம், கால்களுக்கு பாதரட்சை, விருந்துக்குக் கொழுத்த கன்று என்று எல்லாமே ஏக தடபுடல். இன்னும், தகப்பனுடைய அன்பிற்கு முத்தாய்ப்பான வெளிப்பாடு இதுதான், **குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான், காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான்** என்று உள்ளம் நெகிழ்ந்து கூறினான்.

இதைத் தொடர்ந்து தான் இந்தக் காட்சியில் நம்ம ஆள் வருகிறான். ஆம், இந்த நம்ம ஆள் அநேகராகிய நம்மை அடையாளப் படுத்தும் மூத்த குமாரன். வயலிலிருந்து வீட்டுக்குச் சமீபமாய் வருகிறபோது கீதவாத்தியங்களின் சத்தத்தையும், நடனக் களிப்பின் ஓசையையும் கேட்டு வேலைக்காரரிடம் விசாரித்தான். அந்த வேலைக்காரன் அவன் தம்பி வந்த செய்தியையும், தகப்பன் அவனை ஏற்றுக் கொண்ட விதத்தையும் விவரிக்கக் கேட்டபோது கோபங்கொண்டு உள்ளே செல்ல மறுத்தான்.

அப்படி அவன் உள்ளே போக மனதில்லாதிருந்தபோது, **தகப்பன் வெளியே வந்து,** அவனை வருந்தி அழைத்தான். அங்கே தகப்பனிடம் அவன் சீறிப்பாய்ந்த போதும், தகப்பன் பொறுமை காத்து, மூத்தவனின் அணுகுறை தவறாக இருந்த போதும், அவன் உணர்வுகளை மதித்து, அவன் காயங்களுக்கு இதமான வார்த்தை களால் மருந்து போட்டான். உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்தான்; காணாமற் போனான், திரும்பவும் காணப் பட்டான்; ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமே என்றான் (15:32) உவமையில் உள்ள தகப்பன் நம் பரலோக தகப்பனை அப்படியே பார்க்கும்படி செய்கிறார்.

சரி, இப்பொழுது இந்த உவமையில் காணப்படும் தகப்பனிடம் இருந்து நமக்குக் கிடைக்கும் படங்கள் என்னவென்று பார்ப்போம்.

1. **தகப்பன் தெரிந்து கொள்ளும் உரிமை தருகிறார்.** (11-25)

இழந்து மீண்ட மகன் உவமையிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், பரலோக தேவன் ஒவ்வொருவருக்கும் தெரிந்து கொள்ளும் உரிமையைத் தந்திருக்கிறார் என்பது.

இந்த உவமையை இயேசுவானவர் சொன்ன விதத்தைப் பாருங்கள். **ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, சொத்தில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தர வேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவன் அவர்களுக்குத் தன் சொத்தை பங்கிட்டுக் கொடுத்தான்** (லூக். 15:12,13) இளையவன் தன் பங்கை எனக்குத் தாரும் என்று கேட்பதற்கு முன்னமே தான் பெற்ற இந்த மகன் பற்றிய காரியங்கள் அவருக்குத் தெரிந்தே இருந்திருக்கும். அவன்

கேட்பதில் எவ்வித நியாயமும் இல்லையென்பதும், அவன் அதைப் பொறுப்பற்ற முறையில் வீணடிப்பான் என்பதும் அவர் அறிந்த ஒன்று தான். ஆயினும், அந்தப்படி, அதாவது அவன் கேட்ட மாத்திரத்தில், மாறுத்தரம் ஒன்றும் சொல்லாமல் சொத்தைப் பங்கிட்டுக் கொடுத்து விட்டான்.

உவமைகளின் நோக்கம், கேட்பவர் மனதில் ஆவிக்குரிய, பரலோக உண்மைகளைக் கொண்டு செல்வதே. இயேசு ஒரு மாபெரும் போதகர். கூடி வந்து, குறை கண்டு பிடிக்கும் நோக்கோடு காத்திருந்த பரிசேயர்களுக்கும், வேதபாரகருக்கும் பரலோக தேவனுடைய அன்பு பற்றியும், அவருடைய தன்மை பற்றியும் அவர்களுக்குப் பாடம் நடத்துகிறார். நாங்கள் வேதம் தெரிந்தவர்கள் என்று மார்தட்டின இவர்களுக்கு தேவனைப் பற்றிய பால பாடமே தெரியவில்லை என்ற உண்மையை ஓங்கி அடித்துச் சொல்கிறார். அப்படித் தெரியாதபடியால் தான், பாவிகளை இயேசு ஏற்றுக் கொள்கிறார் என்று குற்றப்படுத்து கிறார்கள் (15:2)

அவர் கற்றுக் கொடுத்த முதல் பாடம், தேவன் ஒவ்வொரு மனிதனுக்கும் தெரிந்தெடுக்கும் உரிமையைத் தந்திருக்கிறார் என்பது. ஏதேன் தோட்டத்திலிருந்து மனிதன் இந்த உரிமையைத் தவறாக, பயன்படுத்தி தனக்குத் தானே கேடு விளைவித்துக் கொண்டாலும், **தொடர்ந்து மறுக்காமல் இந்த உரிமையைக் கொடுத்து வருகிறார்.** இந்த உவமையில் இயேசு இவ்வுண்மையை அழுந்தக் கூறுகிறார். அந்தப்படி அவன் சொத்தை அவனுக்குப் பங்கிட்டுக் கொடுத்தான்'' என்று பார்க்கிறோம். உலகத்தில் பிறந்த மிகப் பெரும்பாலோர் இந்த உரிமையை எப்படித் தவறாகப் பயன்படுத்துகிறார்களோ அப்படியே இவனும் தவறாகவே பயன்படுத்தினான். ஆம், தன் உரிமையைத் தவறாகப் பயன்படுத்தி, மோசமான வாழ்க்கை வாழ்ந்து, கேவலமான நிலைக்குத் தாழ்ந்த போது, தன் நிலை உணர்ந்து, தகப்பனை நினைத்து, தகப்பனிடம் திரும்பத் தீர்மானித்தான். நல்லவேளை தப்பித்தான்.

அருமையானவர்களே! தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் உரிமையை நாம் ஒவ்வொருவரும் எப்படிப் பயன்படுத்துகிறோம் ? நம்முடைய தெரிந்து கொள்ளுதலுக்காக தேவன் முன்வைத்தவை களை எந்தப் பார்வை கொண்டு பார்க்கிறோம்? கானானுக்காகக் காத்துக் கொண்டிருந்தவர்களுக்கு தேவன் கூறுவதைக் கொஞ்சம் கவனியுங்கள். **நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர் வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள் மேல்** வானத்தையும், பூமியையும் இன்று சாட்சியாக வைக்கிறேன். ஆகையால், நீயும் உன் சந்ததியையும் பிழைக்கும் படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்து கொண்டு உன் தேவனாகிய கர்த்தரில் அன்பு கூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவி கொடுத்து அவரைப் பற்றிக் கொள்வாயாக; அவரே உனக்கு ஜீவனும், தீர்க்காயுசுமானவர் என்றார்

(உபா 30: 19–20). அப்படியானால், நாம் எதைத் தெரிந்து கொள்ளப் போகிறோம் ?

ஜீவனையும், ஆசீர்வாதத்தையும் இம்மையிலும், மறுமையிலும் பெற வேண்டுவது நம் வாஞ்சையாக இருக்குமானால், நாம் இயேசுவண்டை வரவேண்டும். ஏனெனில், நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்'' என்று விளம்பியுள்ளார் (யோவான் 14:6). இயேசுவண்டை வருவதின் மெய்யான பொருள், இயேசுவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு ஒப்புக்கொடுத்து, இயேசுவின் உபதேசப்படி இரட்சிப்படைந்து, இயேசு வாக்களித்துக் கட்டிய அவருடைய சபையில் அங்கமாவது தான்.

**II. தகப்பன் மனந்திரும்புதலில் மகிழ்ச்சி கொள்கிறார்** (17–24).

இழந்து மீண்ட மகன் உவமையிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், பரலோக தேவன் மனந்திரும்புதலை எதிர்பார்த்து, மனந்திரும்புதலில் மகிழ்ச்சி கொள்கிறார் என்பது.

பழைய, புதிய ஏற்பாடுகளில் நாம் காணும் முக்கியமான வார்த்தைகளில் ஒன்று **மனந்திரும்புதல்.** மனிதனுக்கும், தேவனுக்குமான உறவை சீர்படுத்துவதில் மனந்திரும்புதலுக்கு நீங்கா இடம் உண்டு. இதன் அவசியத்தை உணர்ந்தே இயேசுவுக்கு வழியை ஆயத்தப் படுத்தும்படியாக வந்த யோவான் ஸ்நானன் **மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபமாயிருக்கிறது** என்று பிரசங்கித்தார். இழந்து போன மனிதனை மீண்டும் தேவனிடம் சேர்க்கும்படியாக அவதரித்து வந்த இயேசு ஆண்டவருடைய பிரசங்கத்தின் அடிநாதமே **மனந்திரும்புங்கள்** என்பதே. (மத்.4:17). இன்னும், பிரதான கட்டளையை இயேசுவிடம் பெற்றுக்கொண்ட அப்போஸ்தலர் ஜனங்களிடம் பிரதானமாகக் கொண்டு சேர்த்த இறைச் செய்தியும் **மனந்திரும்புங்கள்** என்பதே (அப். 2:38, 17:31). மனந்திரும்புதலில்லாத ஆன்மீக வாழ்க்கை அர்த்தமில்லாதது.

இளைய குமாரன் தன்னுடைய தவறான தெரிந்து கொள்ளுதலால் தரம் தாழ்ந்து போயிருந்தாலும், தன் மனந்திரும்புதல் மூலமாக தலை நிமிர்ந்தவனாக மாறிவிட்டான். லூக்கா 19 ஆம். அதிகாரத்தில் வரும் ஆயக்காரனாகிய சகேயு மனந்திரும்புதலுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தாலும், ஒரு வகையில் இந்த இளையவன் இவனையும் மிஞ்சி விட்டான் என்றே தெரிகிறது. எப்படியெனில், தான் தவறு செய்து விட்டதை பிறருடைய சுட்டிக்காட்டுதலில்லாமல் தானாகவே உணர்ந்து கொண்டான். இந்தக் குற்ற உணர்விலிருந்து விடுபடுவதற்கான **ஒரே வழி தகப்பனிடம் திரும்புவது தான்** என்பதைத் தானாகவே அறிந்து ஏற்றுக் கொண்டான். இச்செயலை எப்படி சாத்தியப்படுத்துவது என்று தானாக மனதிற்குள்ளாக சொல்லிப் பார்த்து அதாவது, **இனிமேல் உம்முடைய குமாரன் என்று**

**சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன்** என்று ஒத்திகை பார்த்து, அதை உடனே செயல் படுத்தினான். இவனுடைய இந்த அணுகுறை தான் தகப்பனைப் பேருவகைக்குள் இட்டுச் சென்றது.

ஆம், தேவன் மெய்யான மனந்திரும்புதலில் எப்பொழுதும் மகிழ்ச்சி கொள்கிறார். அவர்களின் கடந்த காலங்களைக் குறித்துக் கிஞ்சித்தும் கவலைப்படாமல் முழுமையாக அங்கீகரிக்கிறார். நம் தேவனை அடையாளப்படுத்தும் இந்த உவமைத் தகப்பன், தன் மகன் வருகைக்காக அன்றாடம் காத்திருந்திருக்கிறார். ஆகவே தான், அவன் தூரத்திலே வரும்போதே அவனைக் கண்டு, மனதுருகி ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தம் செய்துள்ளான். இளையவன் தகப்பனிடத்தில் இப்படிச் சொல்லுவேன் என்று **எவைகளை எண்ணியிருந்தானோ அவைகளை அவன் சொல்லும்படி தகப்பன் எதிர்பார்க்கவில்லை.** அவன் அப்படியாகச் சொன்ன போது கூடத் தகப்பன் அதைப் பெரிதாகக் கண்டு கொள்ளாமல், அவனுடைய அங்கீகாரத்திற்குத் தேவையான அனைத்தையும் செய்யும்படி வேலைக்காரருக்குக் கட்டளையிட்டான்.

அருமையானவர்களே ! இந்த இளைய குமாரனைப் போன்று நாமெல்லாரும் தேவனாகிய தகப்பனுக்கு விரோதமான நம் பாவங்களினிமித்தம் உண்மையான மனந்திரும்புதலுக்குள்ளாக வந்து பரலோகத்தில் மிகுந்த மகிழ்ச்சியைக் கொண்டு வர ஆயத்தமா? பேதுரு சொல்வதைப் பாருங்கள். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல், **எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி,** நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் [2 பேதுரு 3:9]. தேவனுடைய பொறுமையை நாம் இளக்காரமாக எண்ணி காலத்தை வீணடிக்காமல், இளைய குமாரன் போன்று நம் மனமாறுதலை செயல்படுத்தத் தொடங்கி, ஆவலோடு காத்துக் கொண்டிருக்கும் தேவனிடம் செல்வோம். அவர் சித்தம் செய்வோம்.

### III. தகப்பன் எல்லோரும் மகிழ்ச்சியாயிருக்க விரும்புகிறார் (25-32)

இழந்து மீண்ட இளையவன் உவமையிலிருந்து நமக்குக் கிடைக்கும், இன்னுமொரு பாடம் பரலோக தகப்பன் எல்லோரும் மகிழ்ச்சியாயிருப்பதையே விரும்புகிறார்.

பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை பூமிக்கு அனுப்பிக் கொடுத்ததின் நோக்கம் ஒருவரும் கெட்டுப்போகக் கூடாது என்பதே [யோவான் 3:16] இதையே வேறுவிதமாகச் சொல்வ தென்றால், யாரும் மகிழ்ச்சியை இழந்து போகக்கூடாது என்பது. இந்தத் தேவனை நாம் இந்த உவமையிலும் காணமுடியும். இளைய குமாரனின் மனந்திரும்புதலினிமித்தம் ஏற்பாடு செய்யப்பட்ட தடபுடலான காரியங்களை அங்கீகரிக்க மறுத்து, வீட்டிற்குள்ளே

போகக் கூட மனதில்லாமல் வெளியே காத்திருந்த மூத்த மகன் காரியத்தில் தகப்பன் செய்த செயலைப் பாருங்கள்! **தகப்பனே வெளியே வந்து அவனை வருந்தி அழைத்துள்ளான்.** இளைய மகன் காரியத்தில் கேட்டவுடன் சொத்தைப் பிரித்துக் கொடுத்த தகப்பன், அவன் வீட்டை விட்டு வெளியேறிபோன போது அவனைத் **தேடிப் போகாத தகப்பன்,** மூத்தவன் கோபித்துக் கொண்டு வெளியே இருந்த போது **வீட்டை விட்டு வெளியே வந்து,** அவன் எவ்வளவு தூரத்தில் நின்று கொண்டிருந்தான் நமக்குச் சொல்லப்படா விட்டாலும், அவன் இருக்கும் இடம் வரை சென்று வருந்தி அழைத்தான். பிறகு நியாயமில்லாமல் கோபப்பட்ட மூத்தவன் **நீர் பட்சபாதமுள்ள தகப்பன் என்ற தொனியில் தன் குமுறலைக் கொட்டித் தீர்த்தபோது** கூட தகப்பன் பொறுமை காத்து, அவனுக்கான விளக்கம் கொடுத்து, அவனும் இம்மகிழ்ச்சியில் பங்கு பெறுவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்கிறார். கவனியுங்கள், அதற்கு தகப்பன் : மகனே **நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ள தெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது. உன் சகோதரனாகிய இவனோ மரித்தான் திரும்பவும் உயிர்த்தான், காணாமற் போனான், திரும்பவும் காணப்பட்டான்.** ஆனபடியினாலே **சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமே** என்று சொன்னான்.

அருமையானவர்களே ! தகப்பன் வெளியே வந்து மூத்தவனை வருந்தி அழைத்து, அவனும் மகிழ்ச்சியில் பங்கு பெற வேண்டு மென்று சொன்னது நமக்கு எதைச் சொல்லுகிறது? ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுக் கொள்வதற்காகத்தானே உவமைகள். அப்படி யானால், நாம் எதை இங்கே கற்றுக்கொள்கிறோம் ? சக ஆத்துமாக்கள் குறித்து நாம் அக்கறையுள்ளவர்களாக இருக்கிறோமோ? பரலோக தகப்பன் பற்றியும், தகப்பன் அன்பு பற்றியும், எல்லோரும் இரட்சிப்பின் மகிழ்ச்சிக்குள் பிரவேசிக்க வேண்டுமென்பது பற்றிய புரிதலும், தெளிவும் இல்லாமல் தங்கள் ஆத்துமாக்களை அழிவின் பாதையில் இட்டுச் செல்லுபவர்களை, நாம் தேடிச் சென்று, அவர்களின் நியாயமான மற்றும் நியாயமில்லாத கோபாதாபங்களுக்கு, சத்தியத்திற்கு எதிரான செயல்பாடுகளுக்கு தேவ வார்த்தைகளைக் கொண்டு மருந்து போட்டு அவர்களை ஆதாயப் படுத்தும் எல்லா முயற்சிகளையும் எடுக்கிறோமா? சொல்லுங்கள் இயேசுவின் பிரதான கட்டளையை நாம் நிறைவேற்றுவோம். (மத். 28:18-20).

ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவன் ஞானவான் (நீதி. 11:30) என்ற போதனையையும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போல் என்றென்றைக்குள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்கள் என்னும் (தானி. 12:3) வசனத்தையும் நாம் நம் பக்தி வாழ்விலும், ஊழியத்தின் பாதையிலும் மறக்கக் கூடாது. அப்படிச் செய்வோமானால் நிச்சயமாக நமக்குப் பரலோகத்தில் பலன் உண்டு! ஆமென்!!

✝

# ஆதிக் கிறிஸ்தவர்களின் ஆராதனை

J.C. சோட்

மக்கள் எவ்வாறு ஆராதிக்கிறார்கள், எங்கே. ஆராதிக் கிறார்கள், எப்போது ஆராதிக்கிறார்கள், ஆராதனையில் அவர்கள் செய்வதென்ன என்பவற்றை எல்லாம் கவனிக்க மிகவும் ஆர்வமாக இருக்கிறது. இன்று அநேக சபைகள் இருப்பதும், அவைகள் ஒவ்வொன்றும் வித்தியாசமான வழிகளில் ஆராதிப்பதையும் நாம் அறிவோம். ஏன் இந்த வித்தியாசம்? அப்படி ஏதாவது வித்தியாசம் இருக்க வேண்டுமா? நாம் எவ்வாறு ஆராதிக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறாரோ அவ்வாறுதான் நாம் அவரை ஆராதித்துக் கொண்டிருக்கிறோம் என நாம் அறிவது எப்படி? அதைக் கண்டு பிடிக்க மிகவும் சிறந்த வழிகளில் ஒன்று வசனத்திற்குச் சென்று, ஆதி கிறிஸ்தவர்கள் எவ்வாறு ஆராதித்தார்கள் என்று கண்டுபிடிப்பதுதான்.

பெந்தெகொஸ்தே நாளிலே, சபை ஆரம்பிக்கப்பட்ட பின்பு, அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும். அந்நியோந்நி யத்திலும், அப்பம் பிட்குதலிலும்,ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என வேதாகமம் கூறுகிறது. (அப் 2: 42) இந்த சீடர்கள் அல்லது கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்க ளுடைய கோட்பாடுகளில் அல்லது உபதேசத்தில் உறுதியாய்த் தரித் திருந்தார்கள். அவர்கள் என்ன செய்தனர்? ஆராதனையின் எல்லா முறைகளும் கொடுக்கப்படாவிட்டாலும், மூன்று முறைகளைக் காணமுடிகிறது. அவை: அந்நியோந்நியம் அல்லது கொடுத்தல், அப்பம் பிட்குதல் அல்லது கர்த்தரின் பந்தி, ஜெபங்கள் ஆகும்.

பின்னர், பவுல் பிரயாணமாகப் போகையில், துரோவா வழியாகச் செல்லும்போது அங்கே பலநாள் தங்கி, அங்குள்ள பிராந்திய சபையாரோடு ஆராதிப்பதாக நாம் படிக்கிறோம்: **வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர் களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்** (அப். 20 : 7). ஆராதனை செய்யும் நாள் வாரத்தின் முதல் நாள் என நாம் இங்கே கவனிக்கவேண்டும். பவுல். துரோவா பட்டணத்துக்கு திங்கட் கிழமை வந்து சேர்ந்திருக்கிறான். என்றாலும், அவர்களோடு சேர்ந்து ஆராதிக்கும் சந்தர்ப்பத்திற்காக அந்த வாரம் முழுவதும் அங்கு தங்கி, சனிக்கிழமையைக் கடந்து. வாரத்தின் முதல் நாள் வருமளவும் காத்திருந்து கர்த்தர் நியமித்த நாளில் கர்த்தருடைய மக்களோடு ஆராதனை செய்தான். இந்த நாளில் தான் சீடர்கள் அல்லது கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்க,

அல்லது கர்த்தரின் பந்தியில் கலந்துகொள்ளக் கூடி வந்தார்கள் என்று மேலும் கூறுகிறது. இறுதியாக. பவுல் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களுக்குப் போதித்தான். பின்னர் அவனுடைய வழியே போனான்.

கர்த்தரின் பந்தியின் முக்கியத்துவத்தைப் பற்றி, தனது கொரிந்திய சகோதரர்களுக்கு பவுல் எழுதுவதை I கொரிந்தியர் 10, 11 ஆகிய அதிகாரங்களில் நாம் காணலாம். அதைக் கவனிப்போம். நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன். என்னவெனில் கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமா யிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும்போ தெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ள வனாயிருப்பான். எந்த மனிதனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக் கடவன். என்னத்தினாலெனில் அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன். கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜன பானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்: அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்'' [1 கொரி 11:23- 30] இப்போது இங்கு காணப்படுகிறவைகளில் சில முக்கிய குறிப்பு களை நாம் பட்டியலிடுவோம்:

1. இதை பவுல் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டான்

2. அப்பமானது கிறிஸ்துவின் சரீரத்தையும், இரசம் அவருடைய இரத்தத்தையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாக அவர் கூறுகிறார்.

3. கிறிஸ்துவின் சரீரத்தையும், அவருடைய இரத்தத்தையும் நினைவு கூரும் படியாக, அவற்றில் பங்கு கொள்ள வேண்டும்.

4. அவ்வாறு செய்யும்போது, கர்த்தரின் மரணத்தை அவர் வருமளவும் அவர்கள் அறிவிப்பதாக இருக்கும்.

5. கர்த்தருக்கு உண்மையாக இராமல், எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து. அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் தனக்கு ஆக்கினைத் தீர்ப்புவரும்படி போஜன பண்ணுகிறான்.

6. இந்த அப்பத்திலும், இரசத்திலும், பங்கு கொள்ளுகிறவன். தன்னைத்தானே சோதித்தறிந்து பங்குகொள்ள வேண்டும். வாழ்வில் பாவத்தோடு இருக்கும் காரணத்தால், கர்த்தரின் பந்தியில் பங்கு கொள்ளத் தகுதியற்றிருப்பவர்கள் தேவனோடு ஒப்புரவாகி அதன் பின்னர் கர்த்தரின் பந்தியில் கலந்துகொள்ள வேண்டுமென்பதே இதன் கருத்து. எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழாதவனும் அல்லது அவ்வாறு வாழ முடியாதவனும், கர்த்தரின் பந்தியில் கலந்துகொள்ளக் கூடாது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. எனவே, ஒருவன் வாழ்வில் இருக்கக்கூடாதது ஒன்று அவனிடம் இருந்தால் அதை விட்டுவிடவேண்டும். அப்போதுதான் அந்த நபர் ஓர் உண்மையான கிறிஸ்தவனாக கர்த்தரின் பந்தியில் கலந்துகொள்ள ஓடியும்.

தொடரும்... ✝

## என் கன்மலை

| | | |
|---|---|---|
| **கர்த்தர் என் கன்மலை** | **–** | **(சங். 18:2; 31:2)** |
| **கர்த்தர் என்னை ஜெநிப்பித்த கன்மலை** | **–** | **(உபா. 32:18)** |
| **கர்த்தர் என் இரட்சிப்பின் கன்மலை** | **–** | **(சங்.89:26; 71:3)** |
| **கர்த்தர் என் இரட்சணியக் கன்மலை** | **–** | **(சங். 95 :1,2)** |
| **கர்த்தர் என் பெலமாகிய கன்மலை** | **–** | **(சங். 62:7; 18:31-33)** |
| **கர்த்தர் என் உயரமான கன்மலை** | **–** | **(சங். 61:2)** |
| **கர்த்தர் என் பிளவுண்ட கன்மலை** | **–** | **(உன். 2:1; எரே 49:16)** |
| **கர்த்தர் என் இருதயத்தின் கன்மலை** | **–** | **(சங். 73:26)** |
| **கர்த்தர் என் ஞானக்கன்மலை** | **–** | **(1கொரி 10:4)** |
| **கர்த்தர் என் நித்திய கன்மலை** | **–** | **(ஏசாயா 26:4)** |

பெண்கள் பகுதி

# யோபுவின் மனைவியிடமிருந்து ...

Sis. ரேச்சல் ராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். இம்மாதம் கர்த்தருடைய வார்த்தைகளைப் படித்து தியானிக்க தேவன் செய்த கிருபைகளுக்காக அவருக்கு ஸ்தோத்திரம். தேர்ந்தெடுக்கும் உரிமை என்பது அதாவது (Choosing) தேவனால் மனுக்குலத்துக்கு கொடுக்கப்பட்ட ஒன்று. இரண்டில் ஒன்ற தெரிந்து கொள்வது. அது என்ன இரண்டு? தேவன் செய்யும்படி ஒன்று, தேவன் செய்ய வேண்டாம் என்று சொன்னது மற்றொன்று. இதை சரியாகக் கண்டுபிடித்து செயல்படுவது தான் மனித வாழ்க்கை. ஆனால், சரியாக நாம் இதில் தவறு செய்து விடுகிறோம். எப்படி தேவன் சொன்னவை களுக்கு கீழ்ப்படியாமல், ஓயாமல் பிசாசுக்கு கீழ்ப்படிந்து செயல்படுவது, வேதாகமத்தில் இதற்கு நிறைய உதாரணங்கள் உள்ளன.

அதிலே ஏதேன் தோட்டத்தில் ஏவாள் அம்மா, அவர்கள் தேவன் கட்டளையிட்டதை மீறி சாத்தான் சொன்னதை நம்பி, கீழ்ப்படிந்து தண்டனைக்கு ஆளானாள். இம்மாதம் இதேபோல் சாத்தான் பக்கம் நின்று, சாத்தானுக்கு உதவிய யோபுவின் மனைவிப் பற்றி பார்க்கலாம்.

**யோபுவின் மனைவி எவ்வாறு சாத்தானுக்கு உதவியாக இருந்தாள்?**

எப்படியாவது யோபு தேவனை தூஷித்து விட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு வேலையை துவங்குவதே சாத்தானின் நோக்கமாயிருந்தது. தேவனும் யோபுவின் உயிரைத் தவிர மற்ற எதையும் செய்யச் சொல்லி சாத்தானுக்கு அனுமதி கொடுத்துவிட்டார். இதுதான் வாய்ப்பு என்றெண்ணி அடிக்கு மேல் அடி கொடுத்து அடுத்தடுத்து யோபுவை நிலை குலையச் செய்து விட்டான். அவை களெல்லாம் நாம் அறிந்ததே. அவனுக்குள்ள யாவும் எடுபட்டு போயிற்று. கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான் யோபு. பின்பு சாத்தான் யோபின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலை மட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான். அவன் ஓர் ஓட்டை எடுத்து, தன்னை சுறண்டிக்கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான் (யோபு 2:7,8) இந்தக் கொடிய சூழ்நிலையில் தன்னோடு இருக்கிற, இருக்கப் போகிற ஒரே ஒரு சொந்தம் அவன் மனைவி மட்டுமே. யோபுவுக் கென்று ஆறுதலாக இருக்கப் போகிறது அவன் மனைவி மட்டுமே என்பதை நன்கு அறிந்த சாத்தானுக்கு அவன் மனைவி துணை போய்

சாத்தானின் நோக்கம் வெற்றி பெறச் செய்துவிட்டாள். சாத்தான், தான் அழிக்கும் ஆயுதமாக பயன்படுத்திக் கொண்டது யோபுவின் மனைவி. நீர் இன்னும் உம்டைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள் [2:9], ஒருவேளை இவள் பேச்சை யோபு கேட்டிருந்தானானால் சாத்தான் மாபெரும் வெற்றியடைந்திருப்பான். ஆனால், யோபு உடனடியாக உறுதியாக நிராகரித்து விட அவனுக்கு பெலன் இருந்தது.

**2. யோபுவின் மனைவி தன்னுடைய பரீட்சையில் பாஸ் பண்ண தவறி விட்டாள்:**

வாழ்க்கை என்பது தீர்மானங்களால் நிரம்பியது. ஒவ்வொரு தீர்மானத்திலும் நாம் ஒன்று சரியானதை தேர்ந்தெடுப்போம் அல்லது தவறானதைத் தெரிந்தெடுப்போம். யோபு தன் பரீட்சையில் தேறினான். யோபுவின் மனைவி தோற்றுப் போனாள், ஏவாள் தோற்றத்தைப் போல

**3. யோபுவின் மனைவி தேவன் பக்கம் நிற்கத் தவறி விட்டாள்:**

உலகத்தில் இரண்டே இரண்டு தாக்கங்கள் தான் உள்ளன. தேவனை தூஷியும் என்று தன் கணவனிடம் சொல்லும்போது தன்னை சாத்தானோடு சேர்த்துக்கொண்டு தன் கணவனையும் அந்த வழிக்கு இழுக்கிறாள்.

4. ஏற்ற துணையாக இருக்க வேண்டியதில் யோபுவின் மனைவி தவறி விட்டாள். இதற்கு முன் ஒருபோதும் யோபுவின் மனைவி யோபுவுக்கு எந்த விதத்திலும் உதவி செய்யவோ, ஆறுதல் படுத்தவோ, தேவையே இல்லை. அவன் நீதிமானாயிருந்து சகலத்தையும் பெற்றுக் கொண்டான். மனிதனுக்கு அடிப்படைத் தேவையென்பது உற்சாகப்படுத்துவது. மாறாக, பிசாசுக்கு முக்கிய ஆயுதமே அதைரியப் படுத்துவது. உற்சாகமூட்டுவது அவசியம் தான் என்றாலும் சில சமயங்களில் அவை கிடைக்காத போது சோர்ந்து போகாமல் அப்படியே முழுமையாக தேவனைச்சார்ந்து விட வேண்டும். சரித்திரத்தில் தவறான பெண்ணை திருமணம் செய்த பெரிய மனிதர்களில் யோபுவும் ஒருவர்.

5. சோதனையை சந்திப்பதில் யோபுவின் மனைவி தோற்று விட்டாள்: ஆம், உண்மைதான் தாங்கமுடியாத பாரம், இழப்பு, மனவேதனை, எல்லாவற்றையும் ஏன் பிள்ளைகளையும் சேர்த்து இழந்தாள். ஆனாலும், தேவனிடத்தில் அவள் தன் நம்பிக்கையே இழக்காமல் இருந்திருக்கலாம். ஆபத்து காலத்தில் நீ சோர்ந்து போவாயானால் உன் பெலன் குறுகினது [நீதி. 24:10] என்று வாசிக்கிறோம். எல்லா அனுகூலமான சூழ்நிலைகளின் மத்தியில் ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள். கஷ்டம் கவலைகள் மத்தியில் மனைவி சோதிக்கப்பட்டாள். யோபுவின்

மனைவி தனக்கு கிடைத்த வாய்ப்புகளைத் தவறவிட்டாள்: திறமைகள், வாய்ப்புகள் கிடைக்கும் போது பொறுப்புகள் அதிகமாகின்றன. தாலந்து உவமைகளில் நாம் இதை அறியலாம் மத். (25:4-30). இவளின் வாய்ப்புகள் என்னென்ன? ஓர் ஆவிக்குரிய வீரன் இரக்கள்ள ஏழைகள் மேல் பரிதாபப்படுகிற ஞானஉள்ளவன். கிழக்கத்தி புத்திரரில் மகா மேன்மையானவனுடைய மனைவி இவள். யோபு தன் பிள்ளைகளின் ஆத்துமாக்களைக் குறித்து மிகவும் அக்கறையுள்ளவன். அப்பேர்பட்ட ஒருவனின் அன்பை பெற்று அவனுக்கு மனைவியாய் இருப்பதே பெரிய ஆசீர்வாதம். தன் கணவனோடு கைகோர்த்து நின்றிருந்தால் சரித்திரத்தில் அவள் பெயர் இடம் பெற்றிருக்கும். ஆனால், அவள் அப்படிச் செய்யவில்லை.

தேவனுடைய வேலை அது எதுவானாலும் அதைத்தடை செய்வது சாத்தானுக்கு வெற்றியைத் தந்துவிடும். சாத்தான் எப்போதும் மக்கள் மூலம் தான் வேலை செய்கிறான். யூதாஸ் காரியோத் ( மத். 25:47-50 ) சாத்தானால் பயன்படுத்தப்பட்டான். கர்த்தருடைய காரியங்களை யாரெல்லாம் தடை செய்கிறார்களோ அவர்களெல்லாம் சாத்தானின் கைக்கூலிகள். தூஷித்து ஜீவனை விடும் என்ற போது, யோபு பதிலாக பைத்தியக்காரி பேசுகிறது போல் பேசுகிறாய் என்கிறார் (2:10). முட்டாள்தனமான ஆலோசனையை மனைவியானவள் கொடுக்கிறாள். தேவன் தான் நம்பிக்கை, இனி வேறு வழியே இல்லை என்று இருக்கிற கணவனுக்கு இப்படியொரு யோசனை. ஆசீர்வாதமான, நிறைவான வாழ்க்கைக்கு சோதனைகள் அவசியம் என்று இவளுக்குத் தெரியவில்லை.

அருமையான சகோதரிகளே! நமக்கும் இது ஓர் அருமையான பாடம். அப்போஸ்தலன் பவுல் இதை அறிந்து நமக்கு அழகாக எழுதிக் கொடுத்திருக்கிறார். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்தினாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாய் இருக்கும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் என்றார் 2. கொரி. 1:3-7). பாடுப்படுகிறவர்களோடு பாடுபட வேண்டும். அதை விட்டுத் தற்கொலை செய்து கொள் என்று யாரையும் பார்த்து சொல்லக் கூடாது. அது நம் வேலை அல்ல வார்த்தைகளை யோசித்து, அளந்து பேச வேண்டும். யோபுவின் மனைவியைப் பார்த்து நாம் பேசும்போது ஜாக்கிரதையாக பிறருடைய விசுவாச வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது. அப்படிச் செய்ய தேவன் உதவி செய்வாராக! ஆமென்!!

# தோல்வி ஏற்படும் பொழுது...

## ( I சாமுவேல் 4:1–22 )

**Dr. ஏபில் நாயகம்**

எனக்குப் பிரியமான வாலிபர்களே, உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் இன்ப நாமத்திலே அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இதழின் வழியாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாதம் 1 சாமுவேல் புத்தகத்திலிருந்து சில காரியங்களை தியானித்து கற்றுக் கொள்வோம்.

இஸ்ரவேல் ஜனங்களுடைய வரலாற்றிலே முக்கியமான மாற்றங்களை உள்ளடக்கிய புத்தகமாக1 சாமுவேல் இருக்கிறது. தமது ஜனங்களை விசாரிப்பதற்கும், வழிநடத்துவதற்கும் தேவனால் நியாயாதிபதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததை அறிவோம். அந்த நியாயாதிபதிகளின் வரிசையிலே கடைசியாக ஏலி மற்றும் ஏலியின் பிள்ளைகளும், சாமுவேல் மற்றும் சாமுவேல் பிள்ளைகளும் நியாயம் விசாரித்தார்கள். இவர்களுக்கு பின் தங்களை ஆளவும், நியாயம் விசாரிக்கவும் தங்களைச் சுற்றி இருந்த ஜனங்களைப் போல தங்களுக்கும் ஒரு ராஜா வேண்டும் என்று தேவனிடத்தில் முறையிட்டார்கள். ஆக, இஸ்ரவேல் ஜனத்தின் வரலாற்றிலே முதல்றையாக ராஜாவாக ஒரு மனிதன் ஏற்படுத்தப்பட்ட சம்பவம் இந்த புத்தகத்தில் தான் இருக்கிறது. இஸ்ரவேல் ஜனம் தேவனைப் புரிந்து கொள்ளாமற் போனார்கள் என்பதற்கு இது ஓர் உதாரணமாக இருக்கிறது. அதை உறுதிப்படுத்தும் விதமாக பல காரியங்களை அவர்கள் செய்தார்கள். அப்படி ஓர் உதாரணத்தை நாம் நம்முடைய தியானத்திற்காக தெரிந்து கொள்வோம்

I சாமுவேல் முதல் மூன்று அதிகாரத்தை நாம் வாசித்தால், ஆசாரியனாகிய ஏலியும் சரி, அவனுடைய குமாரர்களும் சரி, கர்த்தருடைய ஜனங்கள் மீறி நடப்பதற்கு காரணமாய் இருந்தார்கள் என்பதை கவனிக்க முடியும். 2:17 இல் மனித கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணுகிற அளவிற்கு ஏலியின் குமாரருடைய பாவம் பெரிதாக இருந்தது என்று வசனத்திலே வாசிக்கிறோம். ஒழுங்கான வழிநடத்துதலும், அறிவுரைகளும் கொடுப்பதற்கு ஒருவரும் இல்லாத ஒரு நிலையிலே, தேவன் சாமுவேலை தனக்கென்று தெரிந்து கொண்டு அவன் மூலமாக தம்மை ஜனங்களுக்கு வெளிப்படுத்திக்கொண்டு வந்தார்.

இந்தப் பின்னணியில் தான் 4–ம் அதிகாரம் துவங்குகிறது. இந்த அதிகாரத்திலே, இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு விரோதமாக இரண்டு முறை யுத்தம் செய்ய புறப்பட்டு இரண்டு முறையும் தோல்வியை கண்டதாக வாசிக்கிறோம். இந்த சம்பவத்தை நாம் கவனித்து நமக்கான பாடங்களை தெரிந்து கொள்வோம். 4:2 இல் **யுத்தம் அதிகரித்து இஸ்ரவேலர் விழித்திருக்கும் முன்பாக முறியடிக்கப்பட்டார்கள். அவர்கள் சேனையில் போர்க்களத்திலே ஏறக்குறைய நாலாயிரம் பேர் வெட்டுண்டு போனார்கள்** என்று வாசிக்கிறோம். இது முதல் தோல்வி. இந்தத் தோல்வி நிமித்தம் இஸ்ரவேல் ஜனங்களுக்குள்ளாக ஒரு கலக்கம் வந்தது. இன்று கர்த்தர் பெலிஸ்தருக்கு முன்பாக நம்மை முறியடித்தது என்ன'', என்று தங்களுடைய தோல்விக்கு கர்த்தர் தான் காரணம் என்பது போல அவர்கள் முடிவு செய்தார்கள். ஆனால், உண்மை நிலை என்னவென்றால், தேவனுக்கும் இவர்களுக்குமான உறவு விரிசல் அடைந்து இருந்ததையும், விரிசலடைந்த உறவினாலே ஏற்படும் விளைவுகளையும் பற்றின சரியான புரிதல் இல்லாதவர்களாக இவர்கள் இருந்திருக்கிறார்கள். தேவனுடைய ஜனம் என்ற ஓர் அந்தஸ்து இருப்பதினாலேயே தேவன் அவர்களோடு இருப்பார் என்றும், இவர்கள் செய்கிற எல்லா காரியங்களையும் தேவன் வாய்க்கைக்பண்ணுவார் என்றும், தன் ஜனத்தை எல்லா ஆபத்துக்களில் இருந்தும் காப்பார் என்றும் நினைத்தார்கள்

இப்படி இருக்க, தங்களுடைய நிலைமையை உணர்ந்து பார்க்காமல், தேவன் தன்னுடைய கடமையை செய்யத் தவறினார் என்பது போல தங்களுக்குள்ளாக சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். என்ன ஒரு பரிதாபமான நிலை? பிரியமானவர்களே! பலநேரங்களில் நாம் இவர்களைப் போல நம்முடைய வாழ்க்கையில் நன்மையான காரியங்கள் நமக்கு நேரிடாத பொழுது. முயற்சி செய்தும் நாம் விரும்பினது கிடைக்காத போது தேவன் மீது நம்முடைய அதிருப்தியை வெளிப்படுத்துகிறோம். ஆனால், நம்முடைய நிலைமையை சீர்தூக்கிப் பார்க்கத் தவறிவிடுகிறோம். நம்மில் ஏதாவது குறை இருக்கிறதா, தமக்கும் தேவனுக்குமான உறவிலே விரிசலோ அல்லது பிளவோ இருக்கிறதா என்பதை பார்க்கத் தவறிவிடுகிறோம். பிரியமானவர்களே! கிறிஸ்துவுக்குள் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு இருக்கிற ஆசீர்வாதங்கள் அனைத்துமே நிபந்தனைகளோடு வரக்கூடிய ஆசீர்வாதங்களே ஏதோ நாம் உண்மையான தேவனை சேவிக்கிற பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதற்காகவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு இருக்கிற எல்லா ஆசீர்வாதங்களும் எனக்கு கிடைக்கும் என்று நம்புவது சரியான புரிதல் அல்ல. இஸ்ரவேல் ஜனத்தினுடைய சிந்தை எந்த அளவிற்கு தேவனுடைய காரியங்களில் தூரமாக இருந்தது என்பதற்கு மேலும் ஓர் உதாரணம் அடுத்த சம்பவத்தில் இருக்கிறது.

1 சாமுவேல் 4: 3 – 10 வரை நாம் வாசிக்கும் பொழுது தங்களுக்கு ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை கவனிக்க முடியும். கர்த்தர் தங்களோடு இல்லாமல் போனதற்கு காரணம், அவருடைய மகிமை வாசம் செய்யும் உடன்படிக்கை பெட்டி தங்களோடு இல்லாமல் போனது தான் என்று நம்பினார்கள். எனவே, சீலோவில் இருக்கிற கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியை கொண்டு வந்து பாளையத்திலே வைத்து யுத்தம் பண்ண ஆயத்தமானார்கள். வசனம் 4 இன் இறுதிப் பகுதி வாசிக்கும் பொழுது ஏலியின் இரண்டு குமாரும் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி அருகே நின்றார்கள் என்று நாம் வாசிக்கிறோம்.

இவர்களுடைய இந்த செயல்பாட்டை பார்க்கும் பொழுது, இவர்கள் செய்தது முற்றிலும் சரியே என்று எண்ணத்தோன்றும். ஏனென்றால், தேவனின் மகிமை தங்கும் இடமாகிய உடன்படிக்கைப் பெட்டியை தங்களோடு எடுத்துக் கொண்டு வந்தால் தேவன் அவர்களோடு இருப்பார் என்று அவர்கள் நினைத்தது நல்லது தான். இவர்கள் ஏன் இப்படி நினைத்தார்கள் என்று ஒருவேளை நாம் எண்ணலாம். இஸ்ரவேல் ஜனங்களுடைய வரலாற்றை நாம் பார்க்கும் பொழுது மோசேயின் காலத்திலும், யோசுவாவின் காலத்திலும் உடன்படிக்கைப் பெட்டியின் உதவியோடு தேவன் அவர்களை வழிநடத்திக் கொண்டு வந்தார் என்று நாம் கவனிக்க டியும்.

குறிப்பாக, உடன்படிக்கைப் பெட்டியை சுமந்து நிற்கிற ஆசாரியர்களின் கால்கள் புரண்டு ஓடுகிற யோர்தானின் தண்ணீர் பட்ட போது, தண்ணீர் குவியலாக நின்று, உலர்ந்த தரையிலே இஸ்ரவேல் ஜனம் யோர்தானை கடந்தார்கள் என்று யோசுவா புத்தகத்திலே வாசிக்கிறோம். எண்ணாகமம் புத்தகத்தில் மோசேஆசாரியர்களிடம் மீதியானியர்களுக்கு எதிரான யுத்தத்திலே உடன்படிக்கைப் பெட்டியை முன்னெடுத்து செல்லும்படியாக கட்டளையிட்டதை நாம் வாசிக்க முடியும். இவை அனைத்தையும் அறிந்திருந்த இந்த ஜனம், தங்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டுமென்றால் தேவனுடைய பெட்டி நம்மோடு இருக்க வேண்டும் என்று நினைத்து அதை சீலோவிலிருந்து எடுத்து வந்தார்கள். ஆனால்,தேவனுடைய பெட்டி இவர்களோடு இருந்த பொழுதிலும் மீண்டுமாக பெலிஸ்தரிடம் தோல்வி கண்டார்கள்.

தேவன் தங்களுக்கு உதவ வேண்டும் என்று நம்பின ஜனத்திற்கு ஏன் தேவன் உதவவில்லை என்ற கேள்வி நமக்குள்ளாக வரும். பிரியமானவர்களே, மோசேயினுடைய நாட்களிலும் யோசுவா வினுடைய நாட்களிலும் நடந்த காரியங்களை நாம் உற்று கவனிக்கும் போது, தேவனுடைய பெட்டியை எடுத்துச் செல்லும்படியான உத்தரவு தேவனிடத்தில் தான் வந்திருக்கிறது என்பதை நாம் கவனிக்க முடியும்.

உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற தேவனுடைய கட்டளையை ஜனங்கள் நிறைவேற்றின பொழுது தேவன் அவர்களுக்கு உதவி செய்தார். பிதாக்களின் வரலாற்றில் எந்த சம்பவத்திலும் தேவனுடைய உடன்படிக்கை பெட்டி அவருடைய அனுமதி இல்லாமலும், ஆலோசனை இல்லாமலும் எடுத்துச் செல்லப்படவில்லை என்பதை நாம் உறுதியாக அறிய முடியும். ஆனால், இந்த சம்பவத்தை தாம் பார்க்கும் பொழுது, இவர்கள் தேவனிடத்திலோ அல்லது தேவனுடைய மனுஷனாகிய சாமுவேலினிடத்திலோ எந்த ஆலோசனையையும் பெற்றதாகத் தெரியவில்லை. முதல் யுத்தத்திலே தோல்வி கண்ட பொழுது, தேவனிடத்திலே உதவியை கேட்காமல் தேவனுடைய பெட்டி தங்களோடு இருந்தால் மட்டும் போதும் என்று நினைத்தார்கள். தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி தங்களோடு இருந்தால் நிச்சயமாக தேவன் யுத்தம் பண்ணுவார் என்று நம்பினார்கள்.

முதலில், தேவனுடைய சொந்த ஜனம் எண்பதினாலேயே நமக்கு வெற்றி கிடைக்கும் என்று நினைத்தார்கள். இப்பொழுது, தேவனுடைய மகிமை விளங்கும் உடன்படிக்கை பெட்டி தங்களோடு இருப்பதினாலேயே அவர்களுக்கு வெற்றி கிடைத்து விடும் என்று நம்பினார்கள். பெலிஸ்தர்கள் பாகாலை வணங்கக்கூடிய ஜனமாக இருக்கிறார்கள். நாமோ உண்மையான தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் எனவே, வெற்றி நமக்கு உறுதியாக கிடைத்துவிடும் என்று நம்பினார்களை. மேலும், உடன்படிக்கைப் பெட்டி தங்களோடு இருப்பதினால், எந்த நிலைமையிலும் தேவன் தங்களோடு சேர்ந்து தங்களுக்காக யுத்தம் பண்ணியே தீருவார் என்று நினைத்தார்கள்.

பிரியமானவர்களே! இது தவறான ஒரு புரிதல். இன்னும் ஆச்சரியம் என்னவென்றால், பெலிஸ்தர்களுக்கும் இதே நம்பிக்கை தான் இருந்தது. தேவனுடைய பெட்டி பாளையத்தில் வந்துவிட்டது என்பதை தெரிந்து கொண்ட பெலிஸ்தர்,வசனம் 7–8 இல், நாம் வாசிக்கும் போது தேவன் பாளையத்தில் வந்தார் என்று சொல்லப்பட்டபடியினால் பெலிஸ்தர் பயந்து, ஐயோ நமக்கு மோசம் வந்தது. இதற்கு முன் ஒருபோதும் இப்படி நடக்கவில்லையே. ஐயோ, அந்த மகத்துவமான தேவர்களின் கைக்கு நம்மை தப்புவிப்பவர் யார்? எகிப்தியரை சகலவித வாதைகளினாலும் அடித்த தேவர்கள் இவர்கள் தானே'' என்று கலங்கினார்கள். தேவனுடைய பெட்டியை பற்றி விக்கிரக ஆராதனை செய்கிற பெலிஸ்தர் உடைய புரிதலும், மெய் தேவனை சேவிக்கிற இஸ்ரவேலருடைய புரிதலும் ஒன்று போல இருந்தது. பெலிஸ்தர் உடன்படிக்கைப் பெட்டியை தெய்வமாக பாவித்து பயந்தார்கள். இஸ்ரவேல் ஜனங்களும் அதை தேவனுக்கு இணையாக பார்த்தார்கள். இரண்டாவது முறை ஏற்பட்ட தோல்வி, மிகவும் மோசமான ஒரு தோல்வியாகும். தேவனுடைய பெட்டி சிறைபிடிக்கப்பட்டது.

இஸ்ரவேலின் இந்த இரண்டு தோல்விக்கும் காரணம் என்ன என்று நாம் சற்று சிந்திப்போம். பிரியமானவர்களே முதலில், தேவனு க்கும் அவர்களுக்கும் ஆன உறவு எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதை சீர்தூக்கி பார்க்காமலே இருந்தார்கள். தங்களுடைய பிதாக்களினுடைய காலம் தொடங்கி தேவன் தன்னுடைய நிலைப்பாட்டிலே தெளிவாக இருந்தார். தனக்குப் பிரியமாக நடக்கும் பொழுது ஜனங்களை ஆசீர்வதிப்பதும், தனக்கு எதிராகச் செயல்படும் பொழுது, கீழ்ப்படியாமல் இருக்கும் பொழுது அவர்களை தண்டிப்பார் என்பதும் மிகத் தெளிவாக அவர்களுக்கு சொல்லப்பட்டிருந்தது. ஆனால், ஜனங்கள், அதைக் கண்டு கொள்ளாமல், தங்களுடைய நிலைமையை உணர்ந்து பார்க்காமல், நிபந்தனைகளோடு தேவனாலே சொல்லப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்கள் எல்லாம் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாமலேயே தங்களுக்கு கொடுக்கப்படும் என்று நம்பினார்கள். ஏலியின் இரண்டு குமாரர் மூலமாக அக்கிரமமான காரியங்கள் நடைபெற்ற பொழுது அதைக் கண்டு கொள்ளாமல், அதற்கான தீர்வைத் தேடாமலும், அந்தப் பாவங்கள் அகற்றப்படாமலும் இருக்கிற நிலைமையை, இஸ்ரவேல் ஜனம் சிந்தித்துப் பார்க்க வில்லை. இதைக் கண்டித்து நல்வழிப்படுத்த வேண்டிய ஆசாரியனாகிய ஏலியும் இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அப்படி இருக்கும் பட்சத்தில், தேவன் அவர்களுக்கு யுத்தத்தில் உதவுவார் என்று நினைத்தது தவறான ஒரு புரிதலாகும். இது இவர்களுடைய முதல் தோல்விக்கான காரணம்.

முதல் யுத்தத்தில் தோல்வி நேரிட்ட பொழுது, தேவனுடைய ஆலோசனை இன்றி தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துச்சென்று, அந்த உடன்படிக்கை பெட்டியின் மீது நம்பிக்கை வைத்தார்கள். ஏதோ அந்த உடன்படிக்கை பெட்டி தான் அவர்களுக்கு வெற்றியை தரப் போவதாக எண்ணி அதிலே தங்களுடைய நம்பிக்கையை வைத்தார்கள். ஆனால், வெற்றியைத் தருகிறவர் தேவன் என்பதை அவர்கள் மறந்தார்கள். இது, கிட்டத்தட்ட விக்கிரக ஆராதனைக்கு சமமான ஒரு காரியம். வெற்றியை தருகிறவர் தேவன் என்பதை அவர்கள் உணராமல், உடன்படிக்கைப் பெட்டி மட்டும் இருந்தால் போதும் என்று அவர்கள் நம்பினது தவறு. அதுமட்டுமல்ல, யுத்த களத்திலே அந்த உடன்படிக்கை பெட்டிக்கு அருகாமையிலே, அக்கிரமச் செய்கைக்காரர்களாக இருந்த ஏலியின் இரண்டு குமாரர் களை நிறுத்தினார்கள். அவர்களுடைய அக்கிரமங்களை பொறுத்துக் கொள்ளாதவர்களாக இருந்த இந்த ஜனங்களே, அவர்களை உடன்படிக்கைப் பெட்டிக்கு அருகாமையில் நிற்க வைத்தது, எவ்வளவு துணிச்சலான ஒரு செயல். இந்தக் காரணங்களுக்காக அவர்களுக்கு இரண்டாம் முறையாக தோல்வி ஏற்பட்டது.

பிரியமானவர்களே! இந்தச் சம்பவத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடிய பாடம் தோல்வியின் நேரங்களில் தேவன் மீது சரியான புரிதல் நமக்கு இருக்க வேண்டும். நம்முடைய விசுவாச வாழ்க்கையிலும், தோல்வி அல்லது கஷ்டம் வரும் பொழுது, நாம் முதலாவது தேவனை குற்றப்படுத்துகிறோம். எனக்குத் தோல்வியை தந்தது அவர்தான் என்று நினைக்கிறோம். நம் பக்கமாக இருக்கும் குறைகளையோ, பாவமான காரியங்களையோ சோதித்துப் பார்க்க தவறி விடுகிறோம். மேலும், தேவனை நான் ஏற்றுக் கொண்டு விட்டேன், எனவே என்னுடைய வாழ்க்கையிலே எல்லாம் நன்மையானதாக தான் நடக்க வேண்டும் என்று நினைக்கிறோம். தேவன் பாவத்திற்கு எதிர்த்து நிற்கிறவர் என்பதையும், பாவம் நம்மிடம் இருக்கும் பொழுது தேவன் நம்மோடு இருப்பது இல்லை என்பதையும் நாம் மறந்து விடுகிறோம். இன்னும், தேவனால் சொல்லப்பட்ட காரியங்கள், கட்டளையிடப்பட்ட பிரகாரமாகவே கைக் கொள்ளப்பட வேண்டும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட புரிதல் இல்லாமல் இருக்கும் பொழுது, தோல்விகள் நமக்கு நேரிடத் தானே செய்யும்! நம்முடைய தோல்வி, நமக்கு ஏற்படுகிற தனிப்பட்ட இழப்பாக இருக்கலாம். ஆனால், தேவனை அறியாத மற்றவர்கள், மெய் தேவனின் வல்லமையையும் மகத்துவத்தையும் ஏளனம் செய்வதற்கும், குறைவாகப் பார்ப்பதற்கும் நம்முடைய தோல்வி வழி வகுக்கும். எனவே, சரியான தேவனை சரியான புரிதலோடு சேவிக்கும் பொழுது, சரியான நன்மைகளையும் வெற்றிகளையும் நமக்குத் தர அவர் வல்லவராக இருக்கிறார் என்னும் புரிதல் நமக்கு வேண்டும். இப்படியாக வாழ நாம் நம்மை ஒப்புக்கொடுப்போம். தேவன் நமக்கு உதவி செய்வாராக, ஆமென்! ✝

## நீதிமொழிகள் புத்தகத்தில்

### 12 விதமான மனிதர்கள்

*1.* ஞானத்தைக் கண்டடைகிற மனிதன். *3:13*
*2.* விவேகள்ள மனிதன். *12:23*
*3.* நல்ல மனிதன். *14:14*
*4.* உண்மையான மனிதன். *20:6*
*5.* தயையுள்ள மனிதன். *11:17*
*6.* புத்தியும் அறிவுள்ள மனிதன். *28:2*
*7.* ஒரு கன்னிகையை நாடிய மனிதன். *30:19*
*8.* பேலியாளின் மனிதன். *6:12*
*9.* துர்சிந்தனைகளுள்ள மனிதன். *12:2*
*10.* மதியற்ற மனிதன். *15:20*
*11.* உக்கிரமுள்ள மனிதன். *22:24*
*12.* பொல்லாத மனிதன். *24:1*

சிறுவர் பகுதி

# மாதிரியைக் காண்பித்த இயேசு!

Dr. ப்ரெய்சி

ஹெலோ குழந்தைகளே !நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம். எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். கடந்த மாதம் பொல்லாத வேலைக்காரன் பற்றி படித்தோம். இந்த மாதம் யோவான் 13ல் இருந்து சில காரியங்களைப் பார்ப்போம்.

யோவான் 13:5–17ல், இயேசு தம் சீஷருடைய கால்களைக் கழுவுவதைக் காண்கிறோம். இந்த வேதப் பகுதியை கொஞ்சம் நேரம் எடுத்து வாசித்துப் பிறகு தொடர்ந்து படியுங்கள். யோவான் 13:14,15ல் இயேசு கூறுகிறார்–ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். எனவே, சிறு பிள்ளைகளாகிய நாம் அனைவரும் பெருமை கொள்ளாமல் பணிவுடன் இருக்க வேண்டும். அது மட்டும் அல்ல யோவான் 17:20–23ன் படி நாம் கிறிஸ்துவில் ஒன்றாக இருக்க வேண்டும்.

எனவே, சிறு குழந்தைகளே நாம் ஒருவரையொருவர் நேசிப்போம் மற்றும் பணிவோடு இருப்போம். பெருமைப்படாமல், அக்கறை யுடனும் அன்புடனும் இருப்போம்.

**God Bless**

**With love and prayers ,**
Praisey akka

✝

## கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்

# "நீதிமானாகிய நோவா"

சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை

**முன்னுரை:**

1. அன்பானவர்களே மனிதன் தேவனுடைய கட்டளையைமீறி பாவம் செய்ததினால் தேவனுடைய ஐக்கியத்தை (ஜீவனை) இழந்துபோனான்.

2. மனிதனை பாவத்திலிருந்து மீட்டெடுக்க தேவன் இரட்சிப்பின் திட்டத்தை முன்கூறினார், அவருடைய திட்டத்தை இயேசு கிறிஸ்துவின் மூலமாக நிறைவேற்ற திட்டமிட்டார், யோவா. 3 : 16; ஆதி. 3 : 15.

3. இரட்சிப்பின் அதிபதியாகிய மேசியா ஒரு விசுவாசமுள்ள சந்ததியில் பிறந்துவரவேண்டும் என்று தேவன் திட்டமிட்டார்.

4. அந்தப்பஜ தம்மேல் விசுவாசமுள்ளவர்களை தேவன் பாதுகாத்து அவர்களை ஆசீர்வதித்து வழிநடத்தினார்.

5. ஆதாம் முதல் நோவா வரை வம்சவரலாறு: ஆதாம், சேத், ஏனோஸ், கேனான், மகலாலெயேல், யாரேத், ஏனோக்கு, மெத்தூசலா, லொமேக்கு, நோவா. இவர்கள் 10 தலைமுறைகள். ஏறக்குறைய 1000 வருடங்கள்.

6. மற்ற உலகத்தாரோ பாவத்திலிருந்து மனந்திரும்புவதைவிட அதிகமாக பாவத்தையே நேசித்து அதிலே மூழ்கிப்போனார்கள்.

I. **காயீனைப்போல விழுந்துபோன தலைமுறைகள் தங்கள் பூமிக் குரிய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அதிக மதிகமாக தங்கள் வழியை கெடுத்துக் கொண்டதினால் தேவனுடைய கோபத்திற்கு ஆளானார்கள், ஆதி. 6: 5,6,11,12.**

அ. தேவனுடைய குமாரர் (இவர்கள் தேவதூதர்கள் அல்ல) விசுவாசம், உள்ளவர்களாக இருந்தாலும், விசுவாசம் தகுதியும் இல்லாத, அழகான பெண்களைத் திருமணம் செய்து கொண்டதினால், தங்கள் பிள்ளைகளுக்கு தேவ நீதியைக் கற்றுக் கொடுக்க முடியாமல் போனார்கள்.

1. தேவன் புறம்பான அழகைவிட உள்ளத்தின் அழகை கவனிக்கிறார், ஆதி. 6 : 5; உபா. 7 : 2 – 4. 1 இராஜா. 11 : 1 – 10.

2. ஆகையால், நம்முடைய ஆசை பரலோகத்தை நோக்கி இருக்க வேண்டும் என்று தேவன் கேட்கிறார். கொலோ. 3 : 1 – 4.

3. நம்முடைய ஆசை தேவன்மேல் இல்லாவிட்டால் அதை அவருடைய இருதயத்திற்கு விசனமாக எண்ணிக் கொள்ளுவார், ஆதி. 6 : 6.

ஆ. தேவன் நீதியுள்ளவராய் இருப்பதினால் பாவம் செய்த மக்களை தண்டிப்பது அவசியம், ஆதி. 6 : 7.

1. தேவன் பாவங்களை தண்டிக்கவில்லையானால் மனந்திரும்புதல் இல்லாமல் எல்லோருமே நரகத்திற்குப் போவார்கள்; இது தேவனுக்கு பெரிய நஷ்டமாக இருக்கும். தேவன் பாவத்தை வெறுக்கிறார் பாவியை மனந்திரும்பும்படி நேசிக்கிறார், 1யோவா. 4:10

2. தேவன் மனிதனுக்கு சுதந்திரம் கொடுத்ததற்காக அவன் எதைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதை மனிதனிடமே விட்டுவிடுகிறார், ரோம. 6 : 16.

3. ஆகையால் தேவன் மனிதனை நியாயந்தீர்ப்பது நீதியான காரியமாயிருக்கும், தேவன் மனிதனுக்கு சுயமாக முடிவு எடுக்கும் சுதந்திரம் கொடுக்கவில்லையானால், மனிதனை நியாயந்தீர்க்க வாய்ப்பில்லையே, சங். 8 : 6.

4. தேவன் எல்லாவற்றையும் எல்லா காலத்திலும் அற்புதமாக நடத்தினால் என்ன என்று யோசிக்கலாம். அப்படி செய்வது தேவனுடைய நீதிக்கு விரோதமாயிருக்கிறது, சங். 145 : 17.

5. ஏனெனில் தேவன் மனிதனிடத்தில் விசுவாசமும் அதன்படியான செயலும் எதிர்பார்க்கிறார், ஆகையால் அதற்கான வழிகாட்டுதல், சட்டங்கள், கட்டளைகள், நியாங்களைக் கொடுக்கிறார், ஆதி. 18 : 19; யாத். 19 : 5 – 6; மத். 28 : 20.

**II. இந்த உலகம் தேவனுடையது என்று நோவா நீதியாக எண்ணினதினால் தேவனோடு நடந்து விசுவாசத்தினாலே தன் சொந்த குடும்பத்தை இரட்சித்தார், எபி. 11 : 7; 2பேது. 2 : 5.**

அ. அன்றைக்கு வாழ்ந்த மக்களில் நோவா மட்டும் தேவனுக்காக வாழ்ந்தான், ஆதி. 6 : 8, 9; 7 : 1.

1. தேவன் உலகத்தின் சிருஷ்டிகராயிருப்பதற்காக எல்லாம் அவருடையதாயிருக்கிறது என்று நோவா எண்ணினார், லூக்கா. 16 : 11.

2. உலகமும் அதில் உள்ளவைகள் தேவனுடையதாயிருப்பதற்காக, நாம் நம்முடைய சரீரம் உட்பட எல்லாவற்றிற்கும் அந்நியராயிருக்கிறோம். தேவனுடைய சித்தத்திற்கு விரோத மாக பயன்படுத்தினால் அவை அநீதியான பொருளாகும், சங். 95 : 5.

3. மனிதனுடைய ஆசைக்காகவும் சொந்த விருப்பத்திற்காகவும் தேவன் இந்த உலகத்தை உண்டாக்கவில்லை, மத். 7 : 21.

4. நம்முடைய சொந்த ஆசைகளைவிட நாம் தேவனை சந்தோஷப்படுத்த வேண்டும் என்பதே மனிதருக்கு முக்கியமாயிருக்கிறது.

5. தேவன் நிமித்தம் நாம் நம்மைவிட பெலவீனமுள்ளவர்களை கவனித்து அவர்களை ஆதரிக்கவேண்டும். இது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது, கலா. 6 : 2; யாக். 1 : 27.

ஆ. தேவன் உலகவெள்ளத்தின்மூலம் எல்லா பாவிகளையும் அழித்துவிட்டாலும், அதே தண்ணீரால் நீதியை நேசித்த நோவாவின் குடும்பத்தைக் காப்பாற்றினார், 1பேது. 3 : 20.

1. அன்றைய உலகத்தார் நுற்றுக்கணக்கான வருடங்கள் வாழ்ந்தாலும் பொருளாசை, பேராசை, அந்தஸ்து போன்ற பாவங்களுக்காக தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டார்கள், ஆதி. 6 : 11, 12.

2. தேவன் நிமித்தம் நாம் பாவத்தை வெறுக்கும்போது நீதியுள்ள தேவன் நம்முடைய பூமிக்குரிய நன்மைகளைக் கூட தருகிறார், மத். 6 : 33.

3. அதைப்போல வரப்போகிற வெள்ள அழிவிலிருந்து நோவாவையும் அவர் குடும்பத்தையும் காப்பாற்றும்படி தேவன் நோவாவினிடத்தில் கப்பலை ஆயத்தம் செய்யச்சொன்னார், ஆதி. 6 : 13, 14.

4. நோவா தேவனுடைய எல்லா வார்த்தைக்கும் விசுவாசத்தோடு கீழ்ப்படிந்து வேலைசெய்தார், ஆதி. 6 : 22.

5. நோவாவின் நீதியின் நிமித்தம் தேவன் அவனுடைய முழு குடும்பத்தையும் காப்பாற்றி பாதுகாத்தார், ஆதி. 7 : 13, 16.

**III. இயேசுகிறிஸ்துவும் எப்பொழுதும் தேவனுடைய கட்டளைகளி ன்படி நீதியாக நடந்ததற்காக முழு உலகத்தாரும் இரட்சிப்புப்பெறும் வாய்ப்பை ஏற்படுத்தினார், யோவா. 5 : 19; எபி. 5 : 7 – 9.**

அ. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பிதாவின் சித்தம் செய்வதையே நோக்கமாக வாழ்ந்தார், யோவா. 4 : 34.

1. இயேசுகிறிஸ்து அநேக பாவிகள் நடுவில் வாழ்ந்தாலும் தேவனுடைய சட்டங்களையும் தேவநீதியையும் எப்போதும் மதித்தார், மத். 3 : 15.

2. மற்றவர்கள் தேவனுடைய சட்டங்களை மதித்து நடக்கவேண்டும் என்று கற்றுக்கொடுத்தார், யோவா. 15 : 9, 10.

3. இயேசுகிறிஸ்து பரலோகத்திற்கு திரும்பிச்சென்று தேவனோடு வாழவேண்டும் என்கிற குறிக்கோளோடு நடந்துகொண்டார், யோவா. 14 : 12.

ஆ.கிறிஸ்து எந்த சூழ்நிலையிலும் தேவனைப்போல பாவத்தை வெறுத்து நீதியை நேசித்ததற்காக, தன்னுடைய சொந்த ஆசைகளைக் கட்டுப்படுத்தி தன் ஜீவனை ஒப்புக்கொடுத்து சகல காரியங்களையும் சுதந்தரித்தார், எபி. 1 : 2; மத். 4 : 1 – 10; 1பேது. 2 : 22, 23.

1. இன்றைக்கும் மனிதர் கிறிஸ்துவோடு இணைந்து, அவருடைய புதிய ஏற்பாட்டு சத்தியத்தைக் கைக்கொண்டு, பாவம் அநீதி போன்றவைகளுக்கு விரோதமாக போராட வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார், எபே. 6 : 11 – 18.

2. ஆனாலும், நோவாவின் காலத்தின் மக்கள் சிருஷ்டிகரைத் தேடாமல் நூற்றுக்கணக்கான வருடங்கள் அவர்கள் வாழ்ந்தாலும், பூமிக்குரிய விருப்பங்களையே தேடினதால் அழிந்து போனார்கள், அவர்களோடு பாவமறியாத ஜீவ ஜந்துக்களும் மாண்டன, ஆதி. 7 : 21 – 23.

3. இந்த மக்களின் பாவம் எல்லையில்லாமல் போனதால் தேவன் அவர்களை முழுமையாக அழிக்கவேண்டியது அவசியமாயிற்று, ஆதி. 6 : 5, 6.

4. நோவாவின் நீண்ட நாட்களின் எச்சரிக்கையும் அந்த மக்கள் அசட்டை செய்தார்கள், 2 பேது. 2 : 5. ஆகவே, அவர் படைத்த உலகத்தை சுத்தம் செய்வதற்கு அவருக்கு பூரண உரிமை இருந்தது.

5. மெய்யான சிருஷ்டிகரை நாம் மதிக்கவில்லையானால் நிச்சய மாக நாமும் பாவம் செய்கிறோம், சங். 100 : 3 : அப். 17 : 24 – 27.

6. சிருஷ்டிகராகிய தேவனை மதித்து, அவர் கட்டளைகளை நோவா நிறைவேற்றினதினால், நோவாவின் முழு குடும்பத்தையும் தேவன் அழிவிலிருந்து காப்பாற்றினார், ஆதி. 7 : 7

7. இயேசுகிறிஸ்துவோ எத்தனைப் பாவிகள் தேவனைத் தேடுகிறார்களோ, கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்களோ அத்தனை பேரையும் அவரால் இரட்சிக்க முடியும், யோவா. 3 : 17 – 18; 1தீமோ. 1 : 15.

8. இயேசுவின் மூலம் நோவாவின் காலத்து வெள்ளத்தின் தண்ணீரும் கிறிஸ்துவின் காலத்தின் ஞானஸ்நானத்தின் தண்ணீரும் ஒப்பிடமாயிருக்கிறது, 1 பேது. 3 : 21, 22.

**முடிவுரை:**

1. நோவா தேவனை விசுவாசித்து தனக்குக் கட்டளையிட்டபடி செய்து அழிவின் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொண்டார்.

2. இன்றைக்கு நாம் இயேசுகிறிஸ்துவின் உபதேச சட்டத்திற்குக் கீழ்ப்படிவோமானால் வரும் ஆக்கினைக்கு தப்பித்துக் கொள்ளலாம். ரோமர் 6: 19.23.

3. தேவன் பொறுமையாய் இருப்பதை நமக்குக் கொடுத்த மிகப்பெரிய அவகாசமாக எண்ணி சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவேண்டும், 2பேது. 3 : 9.

4. நியாந்தீர்க்கிறவர் ஆயத்தமாயிருக்கிறார், அப். 17 : 30, 31. இயேசுகிறிஸ்து வரும் முன் நம்முடைய ஆத்துமாவை, ஜீவனை ஆதாயப்படுத்திக்கொள்ளவேண்டும், மத். 16 : 25 – 27.

5. அவிசுவாசமான உலகத்திற்கு நோவா காலத்தைப்போல மிகப்பெரிய அழிவையும் தண்டனையையும் தேவன் எதிரே வைத்திருக்கிறார், 2தெச. 1 : 7 – 10.

6. தேவசித்தம் உங்களில் நிறைவேற உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறோம், 2தெச. 1 : 11 – 12. தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

---

# இயேசு கிறிஸ்து

(கொலோ1:15-20)

**1. அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம். (கொலோ.1:15)**

**2. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர். (கொலோ.1:17)**

**3. அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. (கொலோ.1:16)**

**4. அவருக்குள் எல்லாம் நிலைநிற்கிறது. (கொலோ 1:17)**

**5. அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானர். (கொலோ.1:18)**

**6. அவருக்குள் சகல பரிபூரணமும் வாசமாயிருக்கிறது. (கொலோ. 1:19)**

## எப்படி எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் ?

சகோ. பாண்டியன்

**நா**ம் நன்கு அறிந்துள்ளபடி பிலிப்பியருக்கு பவுல் எழுதின நிருபத்தில் நிறைவாக புத்தி சொல்லும் போது **உங்கள் கவலைகளை தேவனுக்குத் தெரியப்படுத்தினால் எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் சிந்தைகளையும் காத்துக்கொள்ளும்** என்றார் (பிலி. 4:6,7). ஐசுவரியவான்களும், கல்விமான்களும், சமுதாயத்தில் அந்தஸ்து, புகழ் பெற்றவர்களும் கூட நிம்மதியில்லாமல் வாழ்கிற இந்த உலகத்தில் சாதாரணமான, பொருளாதாரத்தில் குறைவுள்ள சபை மக்களாகிய நமக்கு மட்டும் எப்படி அந்த நிம்மதி கிடைக்கும்?.

உலக மக்கள் போதை வஸ்துக்கள், தவறான பெண் சிநேகித ங்கள், சூதாட்டம், வீணான பொழுதுபோக்குகள் மூலமாக சமாதானம் தேடியும் காணாதிருக்கிறார்கள். நிம்மதி வெளியி லிருந்து கிடைக்காது, அது நம் இருதயம் மற்றும் சிந்தையில் உண்டாக வேண்டும். பாவத்தினால் தேவனுக்கு விரோதி களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவின் மரணத்தால் தேவனோடே ஒப்புரவாகப்பட்டோம் (ரோமர் 5:10). அதனால், இயேசுவானவரே நம்முடையச் சமாதானக் காரணராக இருக்கிறார். சரி நமக்கு ஏன் சமாதானமில்லாமற் போகிறது? என்று சற்று பார்ப்போம்.

**குடும்பத்தில் ஏன் சமாதானமில்லை?** உறவுகளில் கணவன் மனைவி உறவு என்பது தேவனால் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டது. இதை மனிதன் சரியாகப் பின்பற்றினால் குடும்பத்தில் **எல்லா உறவுகளுமே** சரியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. தேவன் அவர்கள் ஒருவரில் ஒருவர் அன்பு செலுத்தவும், கனம் பண்ணிக் கொள்ளவும் போதித்தார். முக்கியமாக ஒருவன் விபச்சாரத்திற்கு விலகி தேவனுக்குப் பிரியமாக, பரிசுத்தமாக வாழவே கணவன் - மனைவி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆக இந்த உறவு பலப்பட நாம் எதையும், எவரையும் (பெற்றோரையும்) விட்டுக் கொடுத்து வாழ்வதே சமாதானத்திற்கு சிறந்தது. இப்படி சொல்வதால் பெற்றோரை கனம் பண்ணத் தேவையில்லை என்று தப்பாக புரிந்து கொள்ளக் கூடாது.

அடுத்து உடன் பிறந்தவர்களிடம் சமாதானம் கெடாமல் பார்த்துக் கொள்வது சகோதர அன்பை ஆவிக்குரிய மாம்சத்திற்கு உரிய இரு வகைகளிலும் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென புதிய ஏற்பாடு போதிக்கின்றது. தன்னைப் பகைத்தாலும் பொறுத்துக் கொண்ட யோசேப்பு நமக்கு முன்மாதிரியாக உள்ளார். பிறர் நம்மை அற்பமாக எண்ணுவதால் நாம் வருத்தப்பட வேண்டியதில்லை. காரணம் லேயாள் அற்பமாக எண்ணப்பட்ட போது தேவன் அங்கே இடைப்பட்டு அவளை நினைத்தருளினார் (ஆதி. 29:31) அதே போல உன் இயலாமையைக்

பிறர் கேலி பேசும் போது சோர்ந்து போகாமல் அன்னாள் போல ஊக்கமாய் ஜெபித்து நாம் நிச்சயம் ஜெயத்தைப் பெறலாம் (1சாமு. 1:10).

குடும்பங்களில் மற்றொரு முக்கிய உறவுமுறை மாமியார் – மருமகள் என்பது. இதை உலகம் எப்போதுமே கீரி – பாம்பு போலவே பாவித்து வருகிறது. ஆனால், வேதம் ஒரு அருமையான உதாரணமாக நகோமி – ரூத் அவர்களை நமக்குத் தந்திருக்கிறது. திருமணத்திற்குப் பின்பு தன் வீட்டாரை மறந்து ரூத்– நகோமிக்கு முக்கியத்துவம் தந்து வாழ்ந்தாள். மாறாகச் சிலர் பிறந்த வீட்டின் பெருமை பேசுவது வருத்தத்திற்குரியது. அதே போல மருமகளின் நலனே முக்கியம் என்று கருதிய நகோமியும் மாமியார்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்கிறார். ஆக தேவ ஆலோசனைகளின் படி நடந்துக் கொள்ளும் போது குடும்பங்களில் சமாதானம் இருக்கும்.

**அடுத்ததாக வேலை ஸ்தலங்களில் ஏன் சமாதானமில்லை ?** சிலர் ஒரு இடத்தில் தொடர்ந்து பணிபுரியாமல் நஷ்டப்பட்டாலும் பரவாயில்லை என்று அலைந்து கொண்டிருப்பார்கள் இது சரியில்லை. அதற்கு எஜமான்களின் கண்டிப்பு ஒரு முக்கியக் காரணம் கிறிஸ்தவன் துன்பம் சோதனை சகிக்க வேண்டியது போலவே, மேலதிகாரிகளின் கடின சொற்களையும் சகிக்க வேண்டியுள்ளது. ஆகார் – சாராளை விட்டு ஓடிப்போனபோது அவளுக்கு உண்டான கர்த்தருடைய வார்த்தை – **நீ திரும்பி போய் அடங்கியிரு** என்பதே (ஆதி. 16:6–9). அதன் பிறகே அவள் ஆசீர்வதிக்கப்பட்டாள். அதே போல் 10 முறை சம்பளம் மாற்றியம் பொறுமையாய் இருந்த யாக்கோபு திரளாக ஆசீர்வதிக்கப்பட்டார் (ஆதி. 31:7)

**நம்மைப் பகைக்கிறவர்களால் உண்டாகும் சமாதானக் கேடு!** நாம் உலகத்திலிருந்து தெரிந்து கொள்ளப் பட்டவர்கள். நாம் உலகத்தாராய் இராதபடியினால் உலகம் உங்களைப் பகைக்கும் என்றார் ஆண்டவர் (யோவான் 15:19) தாவீது ராஜா சொல்லும்போது நாள்தோறும் என் சத்துருக்கள் என்னை நிந்திக்கிறார்கள், சாபம் இடுகிறார்கள் என்று குறிப்பிட்டார் (சங். 102:8) நன்மை செய்து சுற்றித்திரிந்த ஆண்டவருக்கு ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்த உலகமிது. மேலும், வீணரான சில மனுஷர் பவுலை கொலை செய்யுமளவும் போஜனம் பண்ணுவதில்லை என்று சபதம் பண்ணிக் கொண்டனர். ஆனால், எல்லா சூழ்நிலைகளிலும் தேவன் அவர்களோடே நின்று யுத்தம் செய்தார். தீமையோடே எதிர்த்து நிற்காத போது நம் சமாதானம் காக்கப்படுகிறது.

**போராட்ட வாழ்வில் எப்படி சமாதானம் ?** திசை மாறி அலைந்த நாம் கிறிஸ்துவினால் நெறிப்படுத்தப்பட்டோம். பொன் அக்கினி மூலம் சோதிக்கப்படுவது போல நம் விசுவாசம் பரீட்சிக்கப்படும். நல்லப் போராட்டத்தைப் போராடு என்று தீமோத்தேயுவுக்கு அறிவுரை சொன்ன

பவுல் தன் அந்நியக் காலத்தில் நல்ல போராட்டத்தைப் போராடினேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் என்கிறார். தேவன் நிச்சயம் உதவி செய்வார் [உபா. 4:31]. என் ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய் [சங். 42:5,6]

ஆகவே, நம்பிக்கை தேவன் மீது இருக்கும் போது அவர் நம் கால்களை இடறலுக்குத் தப்புவிப்பார். நெருக்கத்திலே நாம் தாவீதைப் போல கர்த்தருக்குள் நம்மை திடப்படுத்திக் கொள்வோம் [1 சாமு. 30:6] ஏசாயா- வில் தேவனையே நம்பி அவரைச் சார்ந்துக் கொள்ளக்கடவன் [ஏசா. 50:10] என்றும் அப்போது நமக்கு சமாதானம் உண்டு என்றும் பார்க்கிறோம். ஆகவே, நம் கவலைகளை தேவனிடம் தெரியப்படுத்தி, அவரை தொழுது கொள்ளும் போது அவர் நமக்குச் சமாதானம் அருளி நம்மை ஆசீர்வதிப்பார் [சங். 29:11] ஆமென். ✞

# இருதயத்தின் வகைகள்

1. நொறுங்குண்டது (Broken) (சங் 34:18; சங் 51:17; சங் 69:20)
2. நருங்குண்டது (Contrite) (சங் 51:17)
3. மனம் கசந்தது (Grieved) ஆதி 6:6; சங் 73:21)
4. மனப்பூர்வமானது (Willing) (யாத் 25:2; யாத் 35:5,29)
5. திடனற்றுப்போனது. (Discouraged) (எண் 32:7-9; உபா 1:28)
6. கடினமானது (Obstinate) (உபா 2:30)
7. பெருமையானது (Proud) (உபா 814;சங் 101:5; எசே 28:5,17)
8. பொல்லாதது (Wicked) (உபா 159;நீதி 6:1418; எரே 414-18)
9. தத்தளிக்கிறது (Trembling)(உபா 28.65; ஏசா 66:2)
10. உத்தமமானது (Perfect)(1இராஜா 8.6; 1நாளா 299)
11. வஞ்சனையானது (Double)(நாளா 12:33; யாக் 4:8)
12. இளகியது. (Tender) (2இராஜா 22:19; 2நாளா 34:27; எபே 4:32)
13. மென்மையானது (Soft) (1சா 24:5; யோபு 23.16)

# "சகல பிரயாசத்தினாலும் பிரயோசனமுண்டு" நீதி. 14:23

**K.M. பிலிப் பவானி**

மனிதன் எப்பொழுதும் தனக்காக, தன் குடும்பத்திற்காக, சபைக்காக சமுதாயத்திற்காகப் பிரயாசப்படுகிறான். நல்லது ஆனால், பிரயாசத்திற்கேற்ற பலன் உண்டா ? கிடைத்த பலனை அனுபவிக்க முடிகிறதா ? ஆம் எத்தனை ஏமாற்றங்கள், தோல்விகள் கிடைத்தும் பயன்படுத்த முடியாத நிலை. முடிவில் மனமுடைந்து விரக்தியில் மரணத்தைத் தழுவிக் கொள்ளும் நிலையைப் பார்க்கிறோம். இதைத் தான் சாலமோன் ஞானி **அவன் நாட்களெல்லாம் அலுப்புள்ளது; அவன் வேலைகள் வருத்தமுள்ளது; இராத்திரியிலும் அவன் மனதுக்கு இளைப்பாறுதலில்லை** (பிர 2:23) என்றும், மிகப் பெரிய வேலைகளையெல்லாம் நான் செய்த போதிலும், என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லா பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன். எல்லாம் மாயையும், மனதிற்கு சஞ்சல முமாயிருந்தது. சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றும் இல்லை (பிர. 2:4–11) என்று புலம்புகிறதைப் பார்க்கிறோம். அப்படியென்றால் மனிதன் பிரயாசமோ, முயற்சியோ, வேலையோ ஒன்றும் செய்ய வேண்டாமா ? அப்படியல்ல மனிதன் பிரயாசப்பட வேண்டும் (வேலை) என்பது ஆதி முதல் தேவன் மனிதனுக்குக் கொடுத்த பிரதான பொறுப்புகளில் ஒன்று முதல் ஆதாமை, ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும், காக்கவும் வைத்தார் (ஆதி 2:15) தன் ஜனமாகிய இஸ்ரவேலருக்கு கொடுத்த பிரதான 10 கட்டளைகளின் ஊடே **ஆறு நாளும் நீ வேலை செய்து உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக** (யாத் 20:9) என்று கட்டளையிட்டார்.

தனிப்பட்ட விசுவாசியைக் குறித்து புதிய ஏற்பாட்டில் ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது... (2 தெச. 3:10) என்றும் சபையாருக்கே... **உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்த கைகளினாலே வேலை செய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்** (1 தெச. 4:12) என்றும், மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் வேலை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இயேசுவும் கூட மனுஷ குமாரனாய் பிறந்ததால் தன் 30 வயது வரை உலகத் தகப்பனோடு சேர்ந்து தச்சு வேலை செய்தார் (மாற்கு 6:3). 30 க்கு மேல், பரத்துக் கேறும் வரை **அவர் நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்தார்** (அப் 10:35) என்று பார்க்கிறோம். இவைகள் பிரயாசம் (வேலை, முயற்சி) அவசியம் என்பதையே வலியுறுத்துகின்றன. பிரச்சினை என்ன வென்றால், பிரயாசப்பட்டு பெற்ற பலனை மகிழ்ச்சியோடு

பிரயோசனப்படுத்திக் கொள்ள முடிகிறதா? அல்லது கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலையா? இங்கு ஞானி **பிரயாசமெல்லாம் மாயையும், மனதிற்கு சஞ்சலம்** என்றும், ''சகல **பிரயாசத்தினாலும் பிரயோசனமுண்டு** என்றும் இரு எதிர்மறையான கருத்துக்களை கூறுகிறாரே! இது எப்படி?

மனித வாழ்க்கையில் இரண்டும் உண்மையே. ஒன்று **நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக் கொண்டு வருகிறீர்கள்... கூலியை சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதை சம்பாதிக்கிறான்** (ஆகாய் 1:5) என்பதும்; இரண்டாவது **உன் கிரியைக்குத் தக்க பலன் உண்டு; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்,** என்பதும் உண்மையே (எரே 31:15). இதில் சகல பிரயாசத்தினாலும் பிரயோசனம் பெற்று அநுபவிக்க நாம் யாரை சார்ந்திருக்க வேண்டும் என்பதே நாம் கற்றுணர வேண்டிய பாடம். இரண்டையும் வாழ்க்கையில் அநுபவித்த அனுபவசாலி ஞானி தெளிவாய் கூறுகிறார் : **நான் திரும்பிக் கொண்டு சூரியனுக்குக் கீழே கண்டதாவது; ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகமும். பிழைப்பதற்கு ஞானமுள்ளவர்களின் ஞானமும் போதாது; ஐசுவரியம் அடைகிறதற்கு புத்தி மான்களின் புத்தியும் போதாது... அவர் களெல்லாருக்கும் சமயமும், தேவச் செயலும் நேரிட வேண்டும்** (பிர. 9.11) என்றும், தேவன் ஐசுவரியத்தையும், சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம் (பிர. 5:19) என்பதையும் அநுபவித்துக் கூறியிருக்கிறார். மேலும், **உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி, அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்** என்கிறார் (நீதி. 15:3).

அருமையானவர்களே! விதைக்கிறவர்கள் நாமாக இருந்தாலும், விளையச் செய்கிறவர் தேவன் என்பதை ஒருபோதும் மறந்து விட வேண்டாம் (1 கொ 3:7). ஒரு சரித்திரத்தை கவனியுங்கள் ராஜா நேபுகாத்நேச்சார் தன் பிரயாசங்களின் பலனைக் குறித்து, இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால் என் மகிமைப் பிரதாபத்திற்கென்று ராஜ்யத்திற்கு அரண்மனையாக நான் கட்டின மகா பாபிலோன் என்றான். அவன் கட்டினது உண்மைதான். ஆனாலும் ராஜா அவற்றை அனுபவிக்க முடியாதபடி அப்பொழுதே ராஜ்யபாரம் அவனை விட்டு நீங்கிற்று மனுஷரினின்று தள்ளப்பட்டு, வெளியின் மிருகங்களோடு சஞ்சரித்து, மாடுகளைப் போல புல்லை மேய்ந்தான் (தானி. 4.30-33)- அவனது பரிதாப நிலையை பாருங்கள்! ஏன் இந்நிலை? ராஜா, தன் பிரயாசங்களையெல்லாம் வாய்க்கச் செய்த தேவ செயலையும், தேவ அநுக்கிரகத்தையும் நாடாமல், தன் சுய பெலத்தின் மீதும், தன் அதிகாரம் ஐசுவரியத்தின் மீதும் தன் நம்பிக்கையை வைத்து பெருமைப்பட்டு தன்னை உயர்த்தினபடியால், பிரயாசத்தின் பலனை அனுபவிக்கக் கூடிய தேவ அநுக்கிரகத்தை இழந்து போனான்.

அன்பானவர்களே என் சாமர்த்தியம் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்கு சம்பாதித்தது என்று உன் இருதயத்தில் சொல்லாதே உன் தேவனாகிய கர்த்தரே! சம்பாதிக்கிறதற்கான பெலனையும் அதை அனுபவிப்பதற்கான அநுக்கிரகத்தையும் அருளுகிறவர். உபா 8:17,18], ஆம், விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல. இறங்குகிற தேவனாலேயாகும் [ரோமர். 9.16] என்றே நம் விசுவாசமாக இருக்கட்டும்.

இப்பொழுது **சகல பிரயாசத்தினாலும் உண்டான பிரயோசனத்தை அநுபவித்த சில தேவப் பிள்ளைகளை நம் முன் நிறுத்தி உற்று நோக்குவோம்.**

ஈசாக்கு : **ஈசாக்கு அந்த தேசத்தில் விதை விதைதான் கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் 100 மடங்கு பலன் அடைந்தான்** [ஆதி. 26:12]. கர்த்தர் அவனை 100 மடங்கு ஆசீர்வதிக்க தேவ அநுக்கிரகம் பெற காரணம் 1. ஈசாக்கு தன்னையே பலியாகக் கொடுக்கும் அளவுக்கு தேவ சித்தத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்தான் [22:9]. 2. தியானிக்கிறவனாக, ஜெபிக்கிறவனாக தேவனைச் சார்ந்து விட்டுக் கொடுக்கிறவனாக வாழ்ந்தான் என்பதேயாகும் [24:63: 25:21; 26:15-32].

நெகேமியா: இடிந்து போன எருசலேமின் மதில்களை கட்டி எழுப்ப தனி மனிதனாக எழுந்து சகல பிரயாசங்களை மேற்கொண்டான். அதற்கு ராஜாவின் அனுமதியும், உதவிகளும், சொந்த மக்களின் பூரண ஆதரவும், உழைப்பும் தாராளமாகக் கிடைத்து திட்டமிட்டபடி அலங்கத்தை 52 நாட்களில் கட்டி முடித்தான் [நெகே. 1:4-10; 2:4]. இதைக் குறித்து நெகேமியா, **என் தேவனுடைய கரம் என் மேல் இருந்தபடியால் நன்மையாக இருந்ததால்**], [2 8,18] என்கிறார். இப்படி அவன் எல்லா நிலைகளிலும் சகல பிரயாசமும், பிரயோசனப்பட தேவ அநுக்கிரகத்தையே நாடி நின்றான் [4:9]

புதிய ஏற்பாட்டில் [லூக். 5:1-11] சீமோன் பேதுருவும் அவன் கூட்டாளிகளும் இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் மீன்கள் ஒன்றும் அகப்படாத நிலையில், இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வலையைப் போட்டதால், இரண்டு படகுகள் நிரம்பத்தக்க மீன்களை பிடித்தார்கள். அதே படகு, அதே கடல், அதே ஆட்கள் தான்; ஆனால், இப்பொழுது இயேசுவின் வார்த்தைக் கீழ்ப்படிந்தால் இயேசுவின் அநுக்கிரகம் கிடைத்து சகல பிரயாசத்தினாலும் உண்டான பிரயோசனத்தைப் பெற்றார்கள்.

அன்பான தேவ மக்களே ! மேற்கண்ட தேவ ஆலோசனைகளை பெற்றுக் கொண்ட நம் வாழ்க்கையில் **சகல பிரயாசங்களினாலும் பிரயோசனமுண்டு** என்ற தேவ வாக்கு நிறைவேறட்டும் நம் வாழ்க்கை செழிப்பும், சந்தோஷமும், சமாதானயிருக்க தேவன் தாமே அநுக்கிரகம் செய்வாராக! ஆமென்!!

**செப்டம்பர் 9,10 ஆகிய தேதிகளில் காரைக்கால் மற்றும் நாகப்பட்டினத்தில் நடந்த இலவச மருத்துவ முகாம்களின் போது..**







## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



**"Registered" with RNI No: TNTAM/2006/20466**
Postal regn. No. Erode/26/ 2021 - 2023
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

# எங்களது இதர வெளியீடுகள்

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

**தபால் செலவிற்கு
பணம் அனுப்பி
இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**
























## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

To:

## திருமறை தியானம்

**நம்பிக்கை** தொலைக்காட்சியில்

| | |
|---|---|
| செவ்வாய் | காலை 6:30 - 7:00 மணி |
| வெள்ளி | காலை 6:30 - 7:00 மணி |

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.